# திராவிடன்

R.T. ARASU

ஆசிரியர்: என். வி. நடராசன்



15ம் ஆண்டு துவக்கச் சிறப்பிதழ். விலை.. 25 காசு.

# திராவிடன்

எதையுந் தாங்கும் இதயம் கொள்வோம்
எழிலார் திராவிடம் பெற்றிட உழைப்போம்

R.T. ARASU

சென்னை | 19—8—61 | சனிக்கிழமை

# அன்புக் காணிக்கை!

——[ஃ]——

திராவிடன் தனது பயணத்தில் இன்று பதினைந்தாம் ஆண்டினைத் துவக்குகிறான் என்ற மகிழ்ச்சிக்குரிய செய்தியை உங்களுக்குத் தரும்போது எனக்கு ஓரளவு பெருமிதம் ஏற்படுகிறதென்றாலும், கடந்த பதினான்கு ஆண்டு காலப் பயணத்தில் பட்ட கஷ்டநட்டங்களை எண்ணும்போது பெருமூச்சுவிடத்தான் செய்கிறது.

குறிப்பிட்ட ஒரு இலட்சியத்தைக் கடைப்பிடித்து அதன் வழி நின்று பத்திரிகையை நடத்துவதென்பது எளிதல்ல; இதனைப் பத்திரிகைத் துறையில் இருப்பவர்கள் நன்கு அறிவர். அதிலும் பெரிய கம்பெனிகளின் விளம்பரங்களோ அல்லது ஆளவந்தாரின் துணையோ யில்லாமல் ஏழை-நடுத்தர மக்களின்—அதுவும் கழக சார்புடைய மக்களின் ஆதரவை நம்பியே பதினான்கு ஆண்டுகளாகத் தொடர்ந்து திராவிடன் தனது பணியினைச் செய்துவருகிறான் என்றால், எவ்வளவு தொல்லைகளை மேற்கொண்டு திணறியிருப்பேன் என்பதை நான் விளக்கத் தேவையில்லை.

எதிர்ப்புகளும், பொருளாதார நெருக்கடிகளும் எவ்வளவோ பயமுறுத்திய நேரங்களிலெல்லாம், கொள்கையிலிருந்து வழுவாது திராவிடன் தனது தொண்டினைச் செய்துவருகிறான் என்று கழகத் தோழர்கள் மனமாரப் பாராட்டுவதையே நான் அவ்வப்போது ஆறுதலாகக் கொண்டு, மனச்சோர்விலிருந்து விடுபட்டு வந்துள்ளேன்.

காங்கிரசார் ஆட்சிபீடமேறிய 1947ம் ஆண்டு ஆகஸ்டு திங்களில்தான் திராவிடனும் தன் பயணத்தைத் துவக்கினான். மதிப்பிற்குரிய அண்ணா அவர்களின் 'திராவிட நாடு' காட்டும் வழியைப் பின்பற்றியே தனது பயணத்தில் 14 ஆண்டுகளைக் கடந்து வந்துள்ளான். அன்றுமுதல் இன்றுவரை ஆளவந்தார்களின் அக்கிரமம், அநீதி, அட்டூழியம், கொடுமை, எதேச்சாதிகாரம், சுரண்டல் தன்மை ஆகியவைகளைத் தட்டிக் கேட்பதில் திராவிடன் அஞ்சவில்லை.

திராவிடநாடு திராவிடருக்கே என்ற நமது அடிப்படைக் கொள்கையை அன்று மக்கள் சரிவர ஏற்றார்களில்லை. எங்கும் பெருவாரியாக எதிர்ப்புகள் இருந்தன. ஆளவந்தார்களும் அலட்சியம் காட்டினர்! இன்று திக்கெட்டும் திராவிட சமதர்மக் குடியரசுக் கூட்டாட்சி என்று முழக்கமிடப்பட்டு வருகிறது. எனவே டெல்லி தர்பாரும் நமது கழகத்தைக் கடுமையான சட்டத்தின் மூலம்—தடைவிதிப்பதன் மூலம், தீர்த்துக்கட்டி விடலாமென்று மனக் கோட்டை கட்டுகிறது.

அண்மையில் டெல்லியில் கூடிய மாநிலங்களின் முதலமைச்சர்கள் மாநாட்டுக்குத் தலைமை வகித்த இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு, திராவிடத் தனி அரசைக் கோரும் தி. மு. கழகத்தை கடுமையான சட்டத்தால் ஒடுக்கிவிடப் போவதாக உரத்த குரலெழுப்பியிருக்கிறார்! இப்போதுதான் நமது கழக இலட்சியம் வெற்றிப்பாதை நோக்கி நடை போடுகிறதென்று கூறலாம்.

ஏகாதிபத்யங்கள் என்று தங்களின் உறுமலை அதிகமாக்குகிறதோ, முரட்டுத்தனமாக பேசுகிறதோ அதுவே அவைகளின் பலவீனத்திற்கு அறிகுறியாகும். எனவே நேரு பண்டிதரின் உருட்டல் மிரட்டல்களைக் கண்டு கழகம் அஞ்சிடப் போவதில்லை. அதைவிடத் தீவிரமாகத் தொண்டாற்ற முனைவோம் என்பது உறுதி. அத்தீவிரத் தொண்டில், கழகத்தின் அதிகார பூர்வ ஏடான 'நம் நாடு' அண்ணா அவர்களின் பிரதிபிம்பமாய் விளங்கும் "திராவிட நாடு" ஆகியவைகளைப்பின்பற்றி திராவிடன் தனது பதினைந்தாம் ஆண்டுப் பயணத்தில் ஆற்ற வேண்டிய கடமையை இனிதே நிறைவேற்றுவான் என்பதைப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

காஞ்சி கருத்தரங்கில், நமது அண்ணா எடுத்துக்காட்டினார்கள். "கழகத்தின் மகத்தான வளர்ச்சியை மாற்றாரால் அசைக்க முடியாது. கழகத்திற்கு ஏதாவது ஊறு நேருகிறதென்றால், கழகத் தோழர்களிடையே ஏற்படும் சிறு சிறு மனத்தாங்கலாகத்தான் இருக்கமுடியும்" என்று. அதனை நான் மீண்டும் தாழ்மையுடன் நினைவுபடுத்த விரும்புகிறேன். கழகத்தில் ஈடுபாடு கொண்டுள்ள நாம் அனைவரும் தூய்மையான தோழமையுடன் தொண்டாற்ற வேண்டும். பிரச்சினைகளைப் பரிமாறிக் கொள்வதில் திடமான எண்ணமும், அதே சமயத்தில் தோழமை உணர்வு மேலும் மேலும் வளர்த்துக்கொள்ள வேண்டியவர்களாயுமிருக்கிறோம்.

தமிழகத்தி[illegible]விடத்தின் எல்லாப் பகுதிகளிலும் கழகக்கொள்கை பரவிவருவதையும் அங்கெல்லாம் கழகக் கிளைகள் தழைத்து வருவதையும் காணும் டெல்லி ஏகாதிபத்யம் கொக்கரித்து நின்று அடக்குமுறை ஆயுதங்களை கூர்மையாக்கிக் கொண்டிருக்கின்றது.

அதுமட்டுமல்லாமல் நம்மை உடனடியாக எதிர்நோக்கியுள்ள பொதுத்தேர்தலில், கழகம் தீவிரமாக ஈடுபடுவதைத் தடுத்துநிறுத்தி விடலாம் என்ற கீழ்த்தரமான எண்ணங்கொண்டு கழகத்திலே பிளவுகள் ஏற்பட்டுவிட்டதாக ஆளவந்தார்களும், அவர்களை அண்டிப் பிழைப்பவகளும் கோயபல்ஸ் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஆளும் வர்க்கத்தின் இவ்வித கெடுபிடிகளைத் தகர்த்தெறிந்து. அவர்தம் அடிவருடிகளின் பித்தலாட்டத்தை அம்பலமாக்கிக் கழகம் தலைநிமிர்ந்து நடைபோடும், தனதுகொள்கையில் வெற்றியுறும் என்பது திண்ணம்.

அம்மகத்தான வெற்றியைப் பெறும் தீவிரத்தொண்டில், அறிஞர் அண்ணா அவர்களின் அறிவுரையையும் கழகச் சார்புடைய சகா ஏடுகளின் தோழமையையும் கேடயமாகக் கொண்டு திராவிடன் தொடர்ந்து பணியாற்றி வருவான் என்ற உறுதிப்பாட்டினை திராவிடன் சார்பில் பதினைந்தாம் ஆண்டுப் பயணத் துவக்கத்தின் அன்புக் காணிக்கையாக அனைவருக்கும் வணக்கத்துடன் செலுத்துகின்றேன்.

அரசியல் நிலைமைகளையும் கழகப் பணியினையும் திராவிடன் கிழமைதோறும் சீரியமுறையில் தந்துவந்தாலும், பக்கங்கள் குறைவாயிருப்பது பற்றி பல தோழர்கள் சுட்டிக்காட்டி அக்குறையைப் போக்குமாறும் தெரிவித்திருக்கிறார்கள். நண்பர்கள் கூறுவதை மனமார உணருகிறேன். அக்குறைக்குக் காரணமென்ன? சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள்.

பதினான்கு ஆண்டுகளாக திராவிடன் பவனிவந்திருந்தும் இதுவரை "பேப்பர் கோட்டா" பெற்றேனில்லை. அதற்கான முயற்சியில் ஈடுபடவும் இல்லை. இப்போது அம்முயற்சியை மேற்கொண்டிருக்கிறேன். 'கோட்டா' அனுமதி எவ்வளவு விரைவில் கிடைக்கிறதோ அவ்வளவு விரைவில் திராவிடன் 12-பக்கங்களாக வெளிவரச் செய்கிறேன்.

என்றாலும்—அடுத்த வாரம் முதல் பத்து பக்கங்களாகக் கொண்டு வருவதென முடிவுசெய்துள்ளேன். என் நிலைக்கும் இப்போதுள்ள அச்சுத்தாள் அகவிலைக்கும் இது விஷப்பரீட்சை என்றாலும், கழக ஆதரவாளர்களின் — ஏஜெண்டுத் தோழர்களின்—உயர்ந்த ஒத்துழைப்பை நம்பியே இம்முடிவுக்கு வந்துள்ளேன். அதற்கேற்ப ஏஜெண்டுத்தோழர்களும், சந்தாதாரர்களும் தட்டுத்தடங்கலின்றி அவ்வப்போது தங்களின் ஆதரவை திராவிடனுக்கு அளித்து வருவார்கள் என்று பெரிதும் நம்புகிறேன்.

எவ்வளவோ இடர்பாடுகள் ஏற்பட்டாலும், அத்தனையையும் சகித்துக்கொண்டு ஆற்றவேண்டிய கடமைகளில் திராவிடன் முன்னணியில் நின்றிருக்கிறான் என்பதை நான் விளக்கத் தேவையில்லை. அத்தகு பணிக்குப் பெருந்துணையாய் நின்று கருத்துப்படையலை அளித்துவரும் அறிவிற் சிறந்த எழுத்தாளர்களுக்கும், அதனைக் கிழமைதோறும் காலந்தவறாமல் உருவாக்கித்தரும் திராவிடன் அலுவலகத் தோழர்களுக்கும், அதனை நாடெங்கும் பரப்பிவரும் பொறுப்பேற்றுள்ள விற்பனையாளர்களுக்கும், தொடர்ந்து ஆதரவு அளித்துவரும் சந்தாதாரர்களுக்கும், திராவிடன் சார்பில் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திராவிடனின் பணி சீரிய முறையில் நடைபெறும் வகையில் கிழமை தோறும் 'முரசொலி'யில் விளம்பர உதவி அளித்துவரும் அருமைத் தோழர். கலைஞர் கருணாநிதி அவர்களுக்கும் மற்றும் 'நம்நாடு' நிர்வாகிகளுக்கும் திராவிடன் சார்பில் மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆண்டுதோறும் திராவிடன் பொங்கல் மலர்களுக்கு முகப்பு வரைந்துதவும் ஓவிய நிபுணர் பாலு சகோதரர்களுக்கும், அவ்வப்போது ஓவியத் தலைப்புகள், முகப்புப் படங்கள், இச்சிறப்பிதழின் முகப்போவியம் ஆகியவற்றை வரைந்தளித்த ஓவிய நிபுணர் ஆர். டி. அரசு அவர்களுக்கும் பிளாக்குகளை உரிய நேரத்தில் செய்தளிக்கும் சென்னை எஸ். எஸ். எஸ். பிரதர்சாருக்கும் திராவிடன் சார்பில் என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிற்க நமது கழகத்தின் வளர்ச்சிக்காக தங்களது வாழ்வையே தியாகம் செய்த மாவீரர்களுக்கெல்லாம் திராவிடன் சார்பில் வணக்கத்தைச் செலுத்திக்கொள்கிறேன்.

திராவிடனின் பதினைந்தாம் ஆண்டுப் பயணம் தட்டுத்தடங்கலின்றி நடைபெற பேருதவி புரியுமாறு மீண்டும் அனைவரையும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

வாழ்க அண்ணா! வெல்க திராவிடம்!

அன்பன்

என். வி. நடராசன்

# மாற்றான் செய்து வைத்த பொம்மை!



அந்தக் காலம் மணிமுடிதரித்து அரசர்கள் ஆண்டுவந்த காலம். பொதுவாக எல்லா நாடுகளிலும் அந்தக் காலம் அரசர் ஆட்சியைக் காண்பதுபோல், தமிழ்நாட்டிலும் அரசர்கள் பரம்பரையாய் ஆண்டு வந்த முடியாட்சி முறையையே இலக்கியங்கள் வாயிலாகவும் வரலாற்று வாயிலாகவும்காண்கிறோம். அரசர் பரம்பரை ஆள்பவராயும் மக்கள் ஆளப்படுபவராயும் கருதப் பட்டு வந்தனர். இதனால் பெரும்பாலும் ஆளும் வர்க்கத்தினருக்கும் ஆளப்படும் வர்க்கத்தினருக்கும் எந்தவிதமான நெருங்கியதொடர்பு ஏற்பட வேண்டிய தேவை இல்லாமல் இருந்தது.

அரசர்கள் ஆளப்பிறந்தவர்கள் என்றும் மக்கள் ஆளப்படப் பிறந்தவர்கள் என்றும் எண்ணி வந்ததும், வேந்தன் நல்லதைத்தான் செய்யவேண்டும் என்று குடிமக்கள் எதிர்பார்த்து வாழ்ந்துவந்த காலம் அது. அரசன் தவறுகள் செய்து மக்களை வருத்துவானானால் மக்கள் அதனைத் தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும். மக்கள் துயரினை அப்போது புலவர்கள் எண்ணி வருந்தியதுண்டு. அரசனிடம் சென்று மக்களிடம் நடந்துகொள்ளும் நல்ல முறைகளை எடுத்துச் சொல்லி வற்புறுத்துவதுண்டு. அரசன் நல்லவனாய் இருந்தால் அதையே பெரிதாய் எண்ணி வாழ்த்தி வணங்கும் உள்ளங்கள் அவனைச் சுற்றி வாழ்ந்ததையே நாம் இலக்கியங்களில் காண்கின்றோம்.

புறநானூற்றில் வெள்ளைக்குடி நாகனார் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் பாடும் போது, அவன் ஆட்சியைப் பற்றிக் கூறும் கருத்துக்களே அக்கால அரசியலாக இருந்தது. அவர் சோழன் ஏந்தும் வெண்கொற்றக் குடை அரசனுடைய உடலை மட்டும் காப்பாற்றும் வெயிலை மறைக்க உதவும் குடை அன்று; மக்களின் துன்பத்தை எல்லாம் மறைக்க உதவும் அவன் ஏந்திய வெண்கொற்றக் குடை என்று ஆள்பவனின் நிழலிலே ஆளப்படுபவராகிய மக்கள் தங்கியிழிந்த குடை நிழல் அரசியலே என்று சொல்லாமல் சொல்வதைக் காணலாம்.

"………நின் விண்பொரு வியன் [குடை
வெயின்மறைக் கொண்டன்றோ [அன்றே வருந்திய
குடிமறைப்பதுவே கூர்வேல் [வளவ"

—புறம் 35 : 19-21

குடை நிழலில் ஒதுங்க வந்தவர் அந்த நிழலில் இடம் இல்லாவிட்டால் வெளியே செல்லவேண்டிய நிலையே அன்று இருந்தது. குடையைப் பிடித்தவர் தனக்காக மட்டும் —தன் இன்பத்திற்காக மட்டும் குடையைத் தன் பக்கம் சாய்த்துக் கொண்டால் குடைநிழலில் ஒதுங்க வந்தவர் எவ்வாறு அந்தக் குடையைப் பிடுங்கிக்கொள்ள முடியாதோ அதுபோல்தான் அன்று அரசன் தவறு செய்தானானால் அதைப் பொறுத்துத் தாங்கவேண்டியவராகவே மக்கள் இருந்தனர். இல்லாவிடில் அந்தக் கொடியவனின் நாட்டைவிட்டு—ஊரைவிட்டு வேற்றூரோ வேறு நாடோ செல்ல வேண்டிய நெருக்கடி அன்று இருந்தது.

இப்படிக் குடை பிடித்தவருக்கும் குடை நிழலில் ஒதுங்கியவருக்கும் வேறுபாடு இருந்தபோதிலும், அவர்கள் அன்பினால் பிணைப்புண்டிருந்தார்கள். ஆள்பவரும், ஆளப்படுவோரும் மொழியாலும் கலையாலும், பண்பாலும், உணர்ச்சியாலும், உணர்வாலும் ஒற்றுமை உடையவர்களாகத் தோன்றினார்கள். இதனால்தான் ஒரு வர்க்கத்தினர் மற்றொரு வர்க்கத்தினரை உணர்ந்து நடந்துகொள்ள முடிந்தது. இந்த நிலைமையே நெடுங்காலம் நீடித்து வந்ததால்தான் மன்னர்கள் கொடுங்கோலர்களாக மாறவில்லை; குடிகளும் புரட்சி செய்ய முற்படவில்லை.

"நெல்லும் உயிரன்றே; நீரும் [உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை [உலகம்"

(புறம்: 188)

என்று மோசிகீரனார் என்ற புலவர் சொல்லிச் சென்றதில் மேற்கண்ட உண்மையையே காண

**தமிழேரவியன், எம்.ஏ.**

முடிகின்றது. மேலும் இக்கருத்து அக்கால அரசர்களின் உள்ளப் பண்பின் உயர்வையும், மக்களின் மனநிலையையும் காட்டுவதாக உணர்கின்றோம். அக்காலம் முடியாட்சி காலம். தனிப்பட்ட ஒருவரை உயிர் என்று சொல்லி எந்நாளும் போற்றிவருதல் அக்காலத்துக்குப் பொருந்தி வருவதாய் இருக்கலாம். இக்காலம் குடியாட்சி காலம். தனிப்பட்டவரை உயிர் என்று எந்நாளிலும் போற்றும் மனப்பான்மை இன்று இல்லை; இருந்தாலும் கூடாது. அது முடியாட்சிக்கு அடிகோலும்.

எனவே குடியாட்சி பரவிவிட்ட—நடைமுறையில் இருந்து வருகின்ற இந்தக் காலத்தில் நாட்டின் மக்கள் ஒவ்வொருவரும் முதலமைச்சரையோ, மற்ற அமைச்சரையோ தம் வாழ்நாள் வரையும் உயிராகக் கருதி அன்பு வைத்து வருவாரானால் அப்போது குடியாட்சியின் தன்மையே கெட்டுப் போகும். அந்த நிலை நாட்டில் பரவிவந்தால் அது வெறும் கோனாட்சிதான். குடியாட்சி என்று சொல்வதற்கில்லை.

ஆனால் அந்தப் பழைய முடியாட்சி முறையின் இயல்பே இன்றுள்ள குடியாட்சியிலும் புகுந்து உலவக் காணலாம். முடிசூடா மன்னராக பண்டித நேருவே இந்தியத் துணைக்கண்டத்தில் உள்ள மக்களால் உயிரெனப் போற்றப் பட்டு பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேல் அமைச்சராக்கப்பட்டு இருக்கிறார். இப்படி ஒரு தலைவர் பல ஆண்டுகள் ஒரு நாட்டை ஆண்டு வந்தாரானால் அதனுள் ஏதோ உட்பொருள் ஒன்று அடங்கியிருக்க வேண்டும்.

பண்டித நேருவுக்கும் தமிழ் மக்களுக்கும் உள்ள உறவு குறைவு தமிழர் விரும்பாவிட்டாலும் இந்தியாவிலுள்ள மற்றவர்கள் விரும்பினால் அவரே தலைவராக இன்னும் பலகாலம் ஆக முடியும். தமிழ் மக்கள் நேரு தலைவராதலை நேரடியாகத் தடுக்க முனைந்தாலும், அவர் தலைவராக வாக்குகள் அவர் பக்கம் சேர மற்ற மொழி மக்கள் ஆதரவாயிருந்தால் அவரே மறுமுறையும் தலைவராக முடியும்.

இதனால் விளங்கும் உண்மை இதுதான். பெரும் பரப்பளவு உள்ள வட இந்தியாவில் இருக்கும் இந்தி மொழி பேசுவோர் மட்டும் மொழிப் பற்று காரணமாக இந்துஸ்தானியர்களை என்றும் இந்தியாவின் முதல் அமைச்சர்களாக ஆக்கிவரமுடியும். அதனால் அதில் எந்தவிதமான பங்கும் நமக்கு இல்லாமல் போய்விடுவதைக் காண்கின்றோம். இந்த நிலையைப் பார்க்குங்கால் பழங்காலத்தில் தமிழரசர்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இருந்த உடலோடு உயிர்போன்ற தொடர்பு இன்று, வேறு உடல் வேறு உயிர் என்ற நிலைமைக்கு வந்துவிடுகின்றது. தமிழர் உடலுக்குள் நேருவின் உயிர் பாயமுடியாமல் ஆகிவிடுகின்றது.

அதேபோல் நாளைய தேர்தலில் ஒரே கட்சியைச் சேர்ந்தவராயிருந்தாலும் மொரார்ஜி தேசாயும், சுப்பராயனும் இந்தியாவின் முதலமைச்சர் பதவிக்குப் போட்டியிடுகின்றனர் என்று வைத்துக்கொண்டால். தட்டாமல், தயங்காமல் மொரார்ஜி தேசாயைத்தான் காங்கிரஸ்காரர்கள் முதலமைச்சராகத் தேர்ந்தெடுப்பர். மக்களாட்சியில் ஏன் இந்த நிலைமை? ஒரு மொழிக்காரர்களே தலைமைப்பீடத்தைப் பற்றிக் கொள்ள வேண்டிய நிலைமை வந்தது எதனால்?

அரசர்கள் ஆண்டுவந்த காலத்தில் தமிழ் மக்களுக்கும் அரசர்களுக்கும் பண்பிலும், கலையிலும், மொழியிலும், அன்பிலும் ஆதரவிலும் ஒற்றுமையினால் இருந்த தொடர்பு இருந்தது. உடலும் உயிரும் எனவும் புலவர்களால் பாடவும் முடிந்தது. இன்றோ மொழியிலும், பண்பிலும், கலையிலும். உணவிலும், உரிமையிலும்தொடர்பில்லாத தலைவரைப் பார்க்கின்றோம். "மாற்றான் செய்துவைத்த பொம்மை" என்றுதான் இந்திய நாட்டின் தலைவரை எண்ணவேண்டும். மாற்றான்வந்து இந்தப் பொம்மை உனக்கும் சொந்தந்தான் என்றால் அதை நம்பிவிடுவதா? அதைத் தொட்டு இன்னொரு இடத்தில் வைக்கவோ கொஞ்சம் அழுக்காகிவிட்டால் நன்றாயில்லையே என்று மாற்றவோ நமக்கு உரிமையில்லை. ஆனால் மற்ற மொழிக்காரர்களுக்கு அதில் நிறைய உரிமையிருப்பதைக் காண்கின்றோம்.

ஏன் இந்த நிலை நம் நாட்டிற்கு ஏற்பட்டது என்று தென்னகமக்கள் ஒவ்வொருவரும் கேட்க வேண்டிய கேள்விதான்? அப்பொழுதுதான் அவர்களுக்கும் அவர்கள் அரசியலுக்கும் உரிய தொடர்பு துலங்கும்; மொழி, கலை, பண்பு முதலியவற்றைப்பற்றிய உணர்வும் உரிமையும் பிறக்கும். தன் நாட்டைத்தானே ஆளவேண்டும் என்ற எழுச்சியும் பிறக்கும். ஆனால் அப்படி ஏன் இந்த நிலை என்று கேட்கும் தமிழ் மக்கள் எத்தனைபேர் இருக்கின்றார்கள் என்று எண்ணும்போதுதான் உண்மையிலே நாம் வெட்கப்படுகிறோம்.


'கேரளம் கேட்கிறதா?' என்ற வட்டுக் கூச்சலுக்கு
இதோ பதிலளிக்கிறது கேரளம்!

'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற இலட்சிய கீதம்
கேரளத்திலும் எதிரொலிக்கத் துவங்கிவிட்டது

மலையாள மொழியில்

'திராவிடநாடு'

(மாத வெளியீடு)

ஆசிரியர்: ஆலப்புழை பி. எஸ். மாத்யூ

11-8-61 முதல் வெளிவருகிறது

தி.மு. கழகக் கொள்கைகளைப் பரப்பும் ஒரே மலையாள ஏடு!

தனி இதழ் 25 காசு; ஆண்டு சந்தா ரூ. 3-50

விவரங்களுக்கு:

நிர்வாகி: 'திராவிடநாடு', திராவிட பப்ளிகேஷன்ஸ்,
பலராமபுரம் அஞ்சல், S. Kerala.

# திராவிட நாடும் பெரியாரும்!

தென் இந்திய நல உரிமைச் சங்கம் எனனும் ஜஸ்டிஸ் கட்சியின் நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் சேலத்தில் 26-11-43ந் தேதி கூடிச் சில தீர்மானங்கள் செய்யப்பட்டன.

அவற்றில் முதன்மையான தீர்மானம் திராவிட நாடு இந்திய மத்திய அரசாங்கத்தின் ஆட்சி சம்மந்தமில்லாத தனி நாடாகப் பிரிக்கப்பட்டு சுதந்திர நாடாக ஆக்கப்படவேண்டும் என்பதை ஜஸ்டிஸ் கட்சி அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கருத்தைக் கொண்டதாகும்.



திராவிட நாடு தனி நாடாக ஆக்கப்படவேண்டும் என்ற மேற்கண்ட தீர்மானம் திருவாரூர் மாநாட்டிலேயே பல ஆயிரக்கணக்கான பிரதிநிதிகளால் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கும் விஷயமும் அதற்கு வேண்டிய மற்ற காரியங்களைச் செய்ய இயக்கத் தோழர் பி. இராமச்சந்திரன் (ரெட்டி) முதலிய பல பேர்களைக் கொண்ட ஒரு சப் கமிட்டியும் அதே மாநாட்டில் நியமிக்கப்பட்டிருக்கும் விஷயமும் யாவரும் அறிந்ததேயாகும். ஆகவே சேலம் நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தில் செய்த தீர்மானம் ஒன்றும் புதிதல்ல. ஆனல் புதிது எது என்ருல் S. I. L. F.ல் அங்கத்தினராக இருப்பவர்கள் அதை ஒப்புக் கொண்டவர்களாக, இருக்கவேண்டும் என்பதாகும்,

அதுபோலவே மற்ருெரு தீர்மானமாகிய அதாவது ஜஸ்டிஸ் கட்சிக்கு தென் இந்திய நல உரிமைச் சங்கம் என்பதை இனி தென் இந்திய திராவிடர் கழகம் என்பதாக அழைக்கப்படவேண்டும் என்பதாகும். இந்தத் தீர்மானமும் ஒருவிதத்தில் திருவாரூர் மாநாட்டில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்ட தீர்மானம் என்றே சொல்லலாம்,

அதாவது தென் இந்திய நல உரிமைச் சங்க அங்கத்தினர்கள் இனி தங்களை திராவிடர்கள் என்றே சொல்லிக்கொள்ளவேண்டும்—இந்துக்கள் என்று சொல்லிக்கொள்ளக் கூடாது. மக்கள் தொகை எடுப்பதிலும் திராவிடர்கள் என்றே சொல்லவேண்டும் என்பதாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

அத்தீர்மானத்தின் முக்கிய பாகத்தைத்தான் கக்ஷியின் பேராகக் கொள்ளுவதன் மூலம் அமலுக்குக் கொண்டு வர வேண்டுமென்று சேலம் கூட்டம் தீர்மானித்திருக்கிறது.

ஆகவே இந்தத் தீர்மானமும் புதியதல்ல என்றே சொல்லுவோம். சுருக்கமாக மேல் கண்ட சேலம் தீர்மானத்தைப் பற்றி சொல்ல வேண்டுமானுல், நாம் யார்? நமது கொள்கையும் திட்டமும் என்ன? என்பவை விளங்கும் படியான தீர்மானங்கள் என்றுதான் சொல்லவேண்டும். முஸ்லிம்கள் சங்கத்துக்கு முஸ்லிம் லீக் என்று பெயர். அதன் முக்கிய கொள்கை முஸ்லிம் நாடுகள் முஸ்லிம் மெஜாரிட்டியாய் இருக்கும் நாடுகள் மற்றவர் ஆதிக்கமிராத தனி நாடாக ஆக்கப்பட வேண்டும் என்பதாகும். அது போலவே, இந்திய தேசீய சங்கம் என்னும் காங்கிரஸ் இந்துக்கள் சங்கமும் அதன் கொள்கைகள் நாடு முழுவதுமே இராம்ராஜ்ஜியம் அதாவது வேத சாஸ்திர புராணங்களுக்கு வேருக இருக்க இந்து ஆட்சி நாடாக இருக்க வேண்டும் என்பதாகும். இப்படியே தான் ஸ்தாபனங்களின் தத்துவங்கள் இருக்கின்றன.

நாம் அப்படிக்கில்லாமல் தென் இந்தியா சங்கம் என்ருல் அதற்கு அர்த்தமோ கொள்கையோ என்ன இருக்க முடியும்? தென் இந்தியருக்கும், வட இந்தியருக்கும், கிழக்கு இந்தியருக்கும், மேற்கு இந்தியருக்கும் என்ன பேதம் வைத்திருக்கிரும்? என்ன தனிக் கொள்கை வைத்திருக்கிரும். நம் கட்சி விளக்கம் பெருததற்கும் நம் கட்சி மக்களை ஒன்று படுத்தியதாகச் சொல்ல முடியாததற்கும் காரணம் முன் குறிப்பிட்டதுபோல் நாம் யார் என்பதை விளக்காததேயாகும். 'நான்பிராமின்' அல்லது பார்ப்பனரல்லாதார் என்பது நம் கட்சியைப் பெயரிலோ கொள்கையிலோ சரியானபடி தெளிவாக்கப்படவில்லை. பார்ப்பனரல்லாதார் என்ருலும் சரியான விளக்கம் இல்லை.

அன்றியும் நம் நாட்டைப் பற்றிய குறிப்பும் இதுவரையில் சரியாக விளக்கப்படவே இல்லை. தென் இந்தியாவென்பது எந்த நாட்டையும் குறிக்காது. வட இந்தியா என்ருல் நாம் எந்த நாட்டை எந்த இனத்தைக் குறிக்கிரும். என்று யாருக்காவது தெரியுமா? நம்மவர்களுக்கு ,ஆவது விளங்குகிறதா? நம் பிரமுகர்களுக்காவது தெரியுமா ?

எப்படி எப்படியோ நாம் காங்கிரசுக்கு எதிர்ப்பாய் இருக்கிரும் என்கிற அளவில்தான் நாமும் நமது கட்சியும் மற்ற மக்களுக்கு விளங்குகிறதே தவிர நமது கட்சியின் உண்மையான கொள்கையும் திட்டங்களும் அதன் அவசியங்களும் விளங்குவதே இல்லை. ஒரு முஸ்லிமோ, ஒரு பார்சியோ, ஒரு சீக்கியரோ சுலபத்தில் தன் கட்சியில் சேராமல் இருக்கவும் வேறு கட்சியில் சேரவும் முடியாது.

நமக்கு அப்படி ஒரு பேர் இல்லாததாலேயே நம்மவர்கள் பலர் நம் கட்சியில் சேராமலிருக்கவும் எதிரிகளுடன் சேரவும் முடிகிறது. அதை முதலில் மாற்றியாக வேண்டும். அதற்காகவே அத்தீர்மானங்கள் செய்யப் பட்டிருக்கின்றன. ஆதலால் சேலம் மாநாட்டிற்குத் திராவிட மக்கள் ஏராளமாக வந்து கூடி இத்தீர்மானங்களை ஏகமனதாக ஆதரித்து அமுலுக்குக் கொண்டுவந்து நம் கட்சிக்கு புத்துயிர் கொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிரும்.

*

4—12—1943ம் நாள் 'குடி அரசு' இதழில் பெரியார் அவர்கள் திராவிட நாட்டுப் பிரச்சினையைப் பற்றி இவ்வாறு உறுதிப்பாடுடன் தமது எண்ணத்தை வெளியிட்டிருக்கிருர்கள். அது மட்டுமல்ல, தொடர்ந்து பல ஆண்டுகள் திராவிட நாட்டுத் தனி உரிமையைப் பற்றி ஏராளமான ஆதாரங்களைக் காட்டி வற்புறுத்தி வந்திருக்கிருர்கள்.

ஆனல் திராவிட முன்னேற்றக் கழகம் அமைந்தவுடன், சிறுகச் சிறுகச் சிறுக திராவிடர் கழகத்தின் அடிப்படைக் கொள்கையையே அலட்சியப்படுத்தவும் கேலி பேசவும் ஆரம்பித்துவிட்டார்!

இதற்குக் காரணமென்ன? திராவிட சமதர்மக் கூட்டாட்சியை நிறுவுவது இயலாது என்பதாலா? அல்ல! வெளிப்படையாகக் கூற வேண்டுமானல் தி. மு. கழகத்தின் மீதுள்ள குரோதமும் கோபமும்தான்!

அதற்காக வேண்டுமானல் தி, மு. கழகத்தைச் சார்ந்தவர்களையெல்லாம் ஆளவந்தார்களின் துணைகொண்டு சுட்டுப் பொசுக்கித் தள்ளட்டும். அதற்கு பதிலாக பல்லாயிரக்கணக்கான தோழர்களும், தாய்மார்களும் தொண்டாற்றி வளர்த்த தாய்த்திரு நாட்டை மீட்கும் கொள்கையை—தங்களது மகத்தான உயிரையும் வாழ்வையும் துச்சமாக மதித்து தியாகம் செய்த மாவீரர்கள் எந்தக் கொள்கைக்காக பாடுபட்டார்களோ அந்த உயரிய கொள்கையினைப் பெரியார் அவர்கள் கேலி பேசுவதானது அவர் இதுவரை ஆற்றிவந்த அருந்தொண்டுக்கும் ஏற்றதல்ல என்பதைப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திராவிட நாடு—திராவிடருக்கே என்ற கொள்கை தமிழ்நாடு தமிழருக்கே என்றகொள்கைக்கு மாருனதல்ல; இன்னும் சொல்லப்போனல் திராவிடநாடு திராவிடருக்கே என்பதில் சுதந்திரத் தமிழ்நாடு உரிய இடம் பெற்றிருக்கும்.

திராவிட நாடு என்பது, தமிழகம், ஆந்திரம், கேரளம், கருநாடகம் ஆகிய நான்கு மாநிலங்களுக்கும் சேர்த்து ஒரே சர்க்கார் அமைவதல்ல; தனித்தனி அரசுகள் கொண்டதாகவும், பொதுவான பிரச்சினைகளில் ஏற்றத் தாழ்வில்லாத தோழமை கொண்ட கூட்டு அமைப்புத்தான் திராவிடநாடு திராவிடருக்கே என்பது!

வடநாட்டு ஏகாதிபத்யப் பிடிப்பிலிருந்து திராவிடம் பிரிவதை வெங்காய நாடு என்று பெரியார் சொல்லுவாரேயானல் அதுபோலவே வடநாட்டுப் பிடிப்பிலிருந்து தமிழ்நாடு பிரிவது என்று பெரியார் பேசிவரும் கொள்கையை எதற்கு ஒப்பிடுவது ?

எனவே தி. மு. கழகத்தினர் மீதுள்ள குரோதத்தால்—கோபத்தால், பெரியார் அவர்கள் தாமும் பாடுபட்டு உருவாக்கிய உயரிய கொள்கையைக் கேலிபேசுவதை எதிர்காலம் ஏற்றுக்கொள்ளாது.

சுதந்திரத் திராவிடம் நமது பிறப்புரிமை—இந்த உயர்ந்த இலட்சியத்தை வெங்காயநாடு, பொறுக்கித்தின்பதுகள், யோக்கியதையற்றதுகள் என்ற வசை மொழிகளால் பறித்துவிட முடியாது. தி. மு. கழகத்தைச் சார்ந்தவர்களின் உயிரை வேண்டுமானல் மாய்க்கலாம்; சட்டமன்றத் தேர்தலில் வடநாட்டு ஏகாதிபத்தியத்துக்கு துணையாக நின்று எங்களுக்குத் தொல்லை தரலாம். ஆனல் தி. மு. கழகத்தினரின் கடைசி மூச்சு உள்ளவரை திராவிடநாடு திராவிடருக்கே என்ற இலட்சியத்தை எவரும் பறித்துவிட முடியாது. அந்த உரிமையை அடைந்தே தீருவோம்.

எனவே மதிப்பிற்குரிய பெரியார் அவர்கள், அவர் கோரும் சுதந்திரத் தமிழ்நாடு காணவாகிலும் இனி ஆக்கப்பணிபுரிய வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

-என்வியென்


தமிழ் மக்களால் நன்மதிப்புப் பெற்ற
வெண்சங்கு
சீயக்காய்த் தூள்
எங்கும் கிடைக்கும்

மனத்தில் மிகுந்த
செல்வம் ராணி
ஊதுபத்திகளை
உபயோகியுங்கள்



தயாரிப்பாளர் :
வெண்சங்கு சீயக்காய்த் தூள் பாக்டரி
3037—38 டபீர் குளம் ரோடு-தஞ்சை

# திசையெங்கும் திராவிட முழக்கம்!

[அறிஞர் அண்ணா]

நம் கொள்கைகளை மறுப்போர் தொகை குறைந்துவிட்டது. நேர்மாருக தூற்றுவோர் பிதற்றல் வளர்ந்துவிட்டது. இது குறையக் குறைய அது வளரும். இது இயற்கை. கொள்கைகளை எதிர்த்துப் பேச, தடுத்துரைக்க எவரும் இல்லை—அவைகளை அலட்சியப்படுத்தலாம், கொள்கைகள் தெளிவாகத் தெரியாததால், கேலி பேசலாம், சரியாக உணராததால், ஒழித்துவிடலாம் என்று எண்ணிக் கிடக்கலாம், அரசியல் சூதாட்டத்தில் அதிக நம்பிக்கையிருப்பதால். ஆனால் எதிர்த்து மட்டும் பேசமுடியாது!

கேரளத்தார் கேட்கவில்லையே, ஆந்திரத்தார் ஆதரிக்கவில்லையே உங்கள் கொள்கைகளை என்கின்றனர். நமக்கு அவர்களும் கொஞ்சம் தொலைவு—நெருங்கிப்பேச நேரமும், வசதியும் இன்னும் வாய்க்கவில்லை. ஆனால், அவர்களுக்கும் நமக்கும் மனவேற்றுமை என்று அர்த்தமல்ல. திராவிட முரசு விரைவில் ஆந்திர, கேரள, கன்னடப் பகுதிகளில் நிச்சயம் கேட்கும். அவ்வித அறிகுறிகளை மதுரை மாநாட்டிலும் பார்த்தீர்கள்.

கலாச்சாரத்தால், பண்பால், பழக்கவழக்கங்களால், உடையால், உள்ளத்தால் ஒருவரே, திராவிட இனத்தவர். வித்தியாசம் சிறுசிறு அளவிலிருக்கலாம். அது காடைக்கும் கவுதாரிக்குமுள்ளதைப்போல கிளிக்கும் புருவுக்கு முள்ளதைப்போல, மைனாவுக்கும் குயிலுக்கும் உள்ளதைப்போல! மலையாளி குயிலாக இருக்கலாம். தமிழன் மைனாவாக இருக்கக்கூடும். ஆனால் வித்தியாசம் குயிலுக்கும் கோட்டானுக்கும் உள்ளதைப் போலல்ல—வல்லூறுக்கும் புருவிற்கும் உள்ளதைப் போலல்ல—இதை நன்ருக உணர்ந்து கொள்ளவேண்டும்.

சேரநாடுதான் இன்று கேரள நாடாக இருக்கிறது என்பதை எவரும் மறுக்கமுடியாது. !தங்களை மலையாளிகள் என்று கூறிக்கொள்வோர் அனைவரும் சேர பரம்பரையினரே. நல்லதொரு தமிழ்க் காப்பியம் தந்த இளங்கோவடிகள் அங்கே உலவினர். அவர் தந்த சிலப்பதிகாரத்தைக் கேரளம் மறந்தாலும், தமிழகம் மறக்கவில்லை. ஆகவேதான் திராவிடர்கள் என்ருவது ஒருநாள் ஒன்றுபட்டே தீர்வார்கள் என்ற நம்பிக்கையோடு பணியாற்றுகின்ருேம். ஆகவே திராவிடர் என்ற சொல் கற்பனையல்ல, கனவுலக கண்டுபிடிப்புமல்ல காவியத்தில் உள்ள சொல்—சரித்திரத்திலே வருகிற பெயர்—இனத்தின் பண்டைய நாள் பெயர்—அந்தப் பெயரைத்தான் சொல்கிருேம், அரசியல் சூதாட்டப் பெயரையல்ல!

திராவிட நாட்டுப் பிரச்சினை, தமிழ் நாட்டில் பேசப்படுகிறதே என்று கேட்பர். இதனாலேயே 'மற்றவர்கள் ஆதரிக்கவில்லையென்று அர்த்தமில்லை—கேரளத்தார் சம்மதம் கிடைக்கவில்லை, இன்னும் கேட்காததால், கன்னடத்தார் ஒப்புதல் வரவில்லை, அவர்களைக் காணாததால், ஆந்திரத்தார் ஆதரவு பெறவில்லை, அவர்களை அணுகாததால்! கேட்டு மறுத்ததில்லை நாம் சொல்லி எதிர்த்ததில்லை பழகி அவர்கள் வெறுத்ததில்லை. சாகிற நேரத்தில் திராவிட நாட்டுப் பிரஜையாகவே சாவோம் என்பது மட்டும் நிச்சயம், இதற்குக் காரணம் படைபலமா என்ருல் இல்லை—வெளிநாட்டு உதவியா என்ருல் இல்லை. அதற்கான காரணங்கள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக வளர்கின்றன மாகாண மக்கள் அனைவரும் புரிந்தும் கொண்டனர். விழித்தும் கொண்டனர் மாகாண ஆட்சியாளரும் மனங்குமுறியபடியே உள்ளனர். சொன்னால் நேரு கோபிப்பார் பிரசாத் பதறுவார்......இப்படி எண்ணி அடங்கியிருக்கின்றர். ஆகவே இத்தகைய பீதியால், மருட்சியால் வாய்மூடியிருக்கிருர்கள். பசி வந்திடப் பத்தும் பறந்து போம். ஆம், அத்தகைய நிலை பிறக்கத்தான் போகிறது. சொல்லத்தான் 'போகிருர்கள். இது கேலிப் பேச்சல்ல, கற்பனைச் சரக்கல்ல, அரசியல் தந்திரமல்ல—உண்மை!

மலையாளிகளை நசுக்கவே, தனிநாடு கேட்கிருர்கள் தமிழர்கள்—இப்படியும் பேசுபவர்கள் இருக்கிருர்கள். அது தவறு மட்டுமல்ல, பயங்கரப் பித்தலாட்டம். திராவிடக் கூட்டாட்சி, அவரவர் உரிமை, கலை, மொழி, இவைகளில் கை வைக்காது, அங்கங்கே அந்தந்த வட்டாரமொழிகள் பயிலப்படும். அகில உலக தொடர்பிற்கும் கூட்டாட்சிவிவகாரங்களுக்கும் பொதுமொழிஒன்று இருக்கும்.

தனிநாடு என்கிருர்களே — அதற்கான தகுதிகள் நமக்குண்டா? என்கிருர்கள். முதற் காரணம் நம் விருப்பம்! காரணம் சொல்லத் தேவையில்லை நாம் குற்றவாளி



யில்லை. நீதிக்கூடாரத்திலே நிற்பவர்களுமல்ல—தனியினம், ஆண்டவர்கள். தன்னாட்சியை இன்று இழந்தவர்கள். ஆகவே தனிநாடு பெறுவோம் என்பது நம் இதய கீதம். இதற்கு வாதமே தேவையில்லை.

நாம் நாட்டைப் பெறும் வீரம் உள்ளவர்கள்—நாம் யோகம், யாகத்தை நம்பியவர்களல்ல—நாம் வர்ணாஸ்திரம், அக்கினியாஸ்திரம் பெற்றுதான் வெற்றி பெற்றவர்களல்ல! சேரன் செங்குட்டுவன் அன்ருெரு நாள் இமயம்வரை சென்ருன். அதற்காக யாகம் செய்யவில்லை. ஆரியர்கள் தமிழரைப் பழித்துப் பேசுகிருர்கள் என்றவுடன் சேரன் செங்குட்டுவன் கண்களிலே கடுங்கோபம்—அவனது தோள் வலிமையிலே அவனுக்கு அபார நம்பிக்கை. ஆகவே முழக்கமிட்டான். சிங்கத்தின் கூட்டமெனப் படை கிளம்பிவிட்டது. கங்கைக் கரையிலே கனகவிசயரைச் சந்தித்தனர். கல்லேற்றினர். அவர்கள் வாளை, அவர்தம் தோளை நம்பியே எதிரிகளை தங்கள் தாளிலே விழச் செய்யமுடியும் என்ற உறுதி கொண்டவர்கள்—ஜபமாலையை நம்பி யாரும் வாழ்ந்ததில்லை.

திராவிட நாடு சிறு நாடு என்று கூறுகிருர்கள். நாஞ்சில் மாவட்ட அளவுள்ள நாடுகளின் உரிமை பற்றி நேரு பேசுகிருர். திபேத் பிரச்சினையை அலசுகிருர். பூட்டான் பெர்ஷியா இன்னும் எத்தனையோ சின்னஞ்சிறு நாடுகள் தனித்து வாழ்கின்றன. ஆனால் சகல தகுதிகளும் உள்ள திராவிட நடு அந்நியருக்கு அடிமைப்பட்டு கிடக்கவேண்டுமென்கிருர்கள்!

என்னுடைய பொருளை ஒருவரிடம் ஒப்புவிக்கவேண்டுமானல். ஒன்று அந்த ஆள் யோக்கியராக இருக்கவேண்டும், இன்றேல் என் பொருளைக் காக்கும் வல்லமையாவது உள்ளவராக இருக்கவேண்டும். இல்லாவிட்டால் திருப்பித்தருவார் என்ற நம்பிக்கையாவது இருக்கவேண்டும். தன்னையே காப்பாற்றிக்கொள்ள முடியாத வடநாட்டிடம் எப்படி, நம் அருமைத் திராவிடத்தை ஒப்படைப்பது? அதனால்தான் திராவிடநாடு கேட்கிருேம்

உலகம் பொதுதான். எனினும் நாட்டுக்கு நாடு எல்லையிருக்கிறது. முதல் வீட்டு மேனனும் பக்கத்து வீட்டு பணிக்கரும் நாள் முழுவதும் உறவாடுகிருர்கள், பேசுகிருர்கள், பணியாற்றுகிருர்கள்! இருந்தாலும் இரண்டு வீட்டிற்குள் சுவர் இருக்கிறது. அதுமட்டுமா, இரவு பத்து மணிக்கு மேல் படுக்கப் போகிறவர் தெருக்கதவைச் சாத்தித் தாளும் போடுகிருர் ஏன்? இது விரோதத்தின் அறிகுறியா இல்லை. உரிமையின் எல்லை. இதனால் ஒருவரையொருவர் திருடர் என்று எண்ணுகிருர்களா, இல்லையே' ஒரு வீட்டிற்கு முன்னும், பின்னும்கதவுகள் ஏன்? தாழ்ப்பாள்கள் ஏன்? 'காயமே இது பொய்யடா, காற்றடைத்த பையடா, என்று பாடுபவரும். கதவை இழுத்துச் சாத்தடா' என்றுதானே உத்திரவு போடுகிருர். ஆனால் நம் வாதங்களை மறுக்க முடியவில்லை. தூற்றுகிருர்கள். அதனால் தளர்ந்துவிட மாட்டோம். சகிப்புத் தன்மை நமக்கு ஏராளம் உண்டு என்பதை அவர்கள் உணரவேண்டும்.

புதிதாக டாக்டர் வருகிருர் ஊருக்கு—நோயாளிகள் அவரிடமே அதிகமாகச் செல்கின்றனர். அதற்கு முன் அங்கு 'ஏகராஜா' வாக இருந்த சித்தவைத்தியருக்கு கோபம் வரத்தானே செய்யும். அவரிடம் இருக்கும்சூரணம் செங்கற்தூளாயிற்றே. அவர் தரும் மூலிகை, புழற்கடையிலே இருக்கும் கீரைகள்தானே என்ற இவை நினைவிற்கு வருவதில்லை! ஆமாம், பழைய செல்வாக்கை இழந்து சரிந்துகொண்டிருப்பவர்களுக்கு புதிதாக வளர்ந்திருப்போரைப் பார்த்தால் வயிற்றெரிச்சல் வரும். ஆகவே நம்மைத் தூற்றுகிருர்கள்.

சிலர் இப்பொழுது நம்மைத் தூற்றுவதையே தொழிலாகக் கொண்டு திரிகிருர்கள். அத்தகைய வசைமொழிகளைத் தாங்கிக் கொள்ள வேண்டும். எதையும் தாங்கும் இதயம் வேண்டும். அவர்கள் ஏன் தூற்றுகிருர்கள், தெரியுமா? அப்படிப் பேசுவதால் நம் தோழர்கள் ஆத்திரத்தினல் சண்டைக்கு வருவார்கள். அதைக்கொண்டு தடையுத்தரவுகள் போடலாம். பிறகு இம்மாதிரிக் காரணங்களைக் காட்டி, இயக்கத்தையே சட்ட விரோதமாக்கலாம் என்று திட்டமிட்டு செய்கிற சதிவேலை.

ஆந்தை அலறுகிறது என்பதற்காக மனிதர்கள் சண்டைக்குப் போவதில்லை. நரி ஊளையிட்டால், அதனைத் தடுக்க எவர் முயற்சி செய்வர்? சந்திரன் பூரண ஒளி வீசும் பொழுது பலருக்கு பல எண்ணங்கள் உண்

(6-ம் பக்கம் பார்க்க)

# பள்ளுபாடும் திராவிடனை வாழ்த்துவோம்!

வெள்ளையனென்னும் வெளிநாட்டான்
வந்திங் குரிமைப் பறித்திட்டே
கொள்ளை யடித்தான் செல்வத்தைக்
கொண்டு சேர்த்தான் தன்னாட்டில்.
அள்ளக் குறையா அமிழ்தகமும்
அனுதினந் துன்பம் மிகவடைந்தே,
கள்ளனைப் போன்றோன் வெளியேற
கட்டுப் பாடுடன் உழைத்ததுவே!

நாற்பத் தேழாம் ஆண்டினிலே
நாடு விடுதலை பெற்றதுவே!
பொற்புடன் நாட்டார் வாழ்ந்திடுவார்;
பொலிவுக ளுற்று விளங்கிடுவார்;
நற்பணி பலவும் ஆற்றிடுவார்;
நலிவுக ளின்றி ஆண்டிடுவார்;
பற்பல நன்மை செய்திடுவார்;
பாங்குற ஆட்சி நடத்திடுவார்;

என்றே நாட்டோர் எண்ணிட்டார்;
யாவரும் ஒன்றென கொண்டிட்டார்;
சென்றே காங்கிரஸ் கையினிலே,
செங்கோல் தனையுந் தந்திட்டார்.
அன்றே வடவரி னாதிக்கம்
அளவிலா தளவில் ஏற்படவே
நன்றாந் 'திராவிடன்' எனுமிதழே
நாட்டின ரேற்கத் தோன்றியதே

ஈரே ழாண்டுகள் இனிதுறவே
இவ்விதழ் வளர்ந்து தானின்று
பாரே புகழ ஐமூன்றை
பாங்குற ஏற்றது பணியாற்ற.
சீரே அதனின் செயலனைத்தும்
செந்தே னினிமை படித்தற்கும்
தாரே போற்றத் தரவல்ல
திராவிடன் வாழ்க திகழ்வுடனே!

எண்ணத்தாளில் சிந்தனையால்
எழிலுற கருத்தை அச்சேற்றி
வண்ணத் தமிழில் வழங்கிடும்நம்
வளமார் திராவிட உயர்வாளர்
**அண்ணா** நெறியில் பிறழாது
அகத்தினில் வஞ்சங் கலவாது
திண்ணிய உளத்தோ டுழைத்திடுவார்
தோழர் என். வி. என். வாழியவே

வற்றா நதிகள் வளைந்தோடி
வளமே கொழிக்குந் திருவிடத்தில்
பற்றாக் குறைகள் வளர்வதுமேன்?
பசியால் மக்கள் வாடுவதேன்?
கற்றோர் புகழுங் கவின்மொழியைக்
காக்கத் தமிழர் துடிப்பதுமேன்?
உற்ற துணையை வடநாட்டார்
உதவா தோர வஞ்சனையா!

தென்னக தொழில்கள் தேய்வதுமேன்?
தேசுற வடக்கு வாழ்வதுமேன்?
பன்னரும் வளங்கள் படைத்திருந்தும்,
பைந்தமிழ்த் திராவிடம் மாய்வதுமேன்?
என்ன குறைகள் இங்குண்டு?
எற்றுக் கிரந்து வாழ்வதுநாம்?
நன்றே இவற்றை விளக்கிட்டு
நலனுற திராவிடன் பணியாற்றும்

இவ்விதழ் திராவிடர் கைவாளே!
இயம்பிடும் அனைத்தும் பொற்றாளே!
அவ்வித் தழுக்கா றுடையோரும்.
அன்புடன் போற்ற மணம்நாளும்!
செவ்விய வழியைத் தான்காட்டும்!
சிந்தையி னையம் அறவோட்டும்!
தெவ்வவ ரஞ்சி ஓடிடவே,
திராவிடன் பரணி பாடிடுமே!

கத்துங் கடல்சூழ் நாட்டோரின்;
கண்ணீர் துடைக்கும் நற்றோழன்!
முத்துக் கருத்தமை நல்லாரம்!
முத்தமிழ்க் கனியின் சுவைசாரும்
நித்தந் திராவிடர் நலனெண்ணும்
இனிதுற வாழ வழியுன்னும்
பத்தும் நாலு கடந்ததுவே,
பயனுற நின்று வளர்ந்திடுமே!

நலம்பல ஆற்றும் இவ்வேடு
நன்றே வாழ்க சிறப்போடு
உலகின ருய்ய பணியாற்றி
உயர்தமிழ் மொழியின் அணியாகி
வலம்புரி முத்தின் ஒளிபோலே
வண்டமிழ் மொழியின் சுவைபோலே
பலசிறப் புற்று வளர்ந்திடுமே
பாரினர் போற்ற இலங்கிடுமே.

**- கவிஞர் மயிலை முத்தெழிலன்**

டாகலாம்—ஆனால் திருட்டு எண்ணமுள்ளவனுக்கு இருட்டு இல்லையே என்ற ஏக்கத்தால் நிலவைக் கடிந்துரைப்பான். அதுபோல நம் வளர்ச்சியைக் காணும்பொழுது வாழ்விழந்தவர்கள் சிலர் தூற்றுகிறார்கள். 'அவர்கள் அதைத்தான் பேசுவார்கள்—பேச முடியும்—பேசத் தெரியும். அவர்கள் திட்டந் தீர்ந்துவிட்டது. ஆகவே சில்லரைகளைப் பற்றிக் கவலைபடக்கூடாது.

வசை மொழிகளால் நாம் ஒழிந்துவிடுவோம் என்றால், ஜின்னாவைப்பாருங்கள். பேனா எடுத்து எழுதத் தெரிந்தவர்கள் எல்லோராலும் தாக்கப்பட்டவர். பேனா பிடித்தவர்கள் அனைவராலும் பிரபந்தம் பாடப்பட்டு போற்றப்பட்ட காந்தியாரே, நேரில்வந்து பிறகு பேசவேண்டியதாயிற்று! ஆகவே தூற்றல் நம்மைத் துளைத்து தூளாக்கி விடாது.

சுதந்திரம் பெற்றவர்கள் நாம்—இவர்கள் யார் எங்களைத் தட்டிக்கேட்க என்ற பல்லவியை எங்கும் இவர்கள் பாடுகிறார்கள். இவர்கள் கஷ்டப்பட்டார்கள். ஒத்துக்கொள்கிறோம். பகவத்சிங் தூக்குமேடை ஏறினார். அலிபுரம் சிறையில் அவதிப்பட்டார்கள். அடிபட்டார்கள், உதைபட்டார்கள், சிறைக் கொடுமைகளைத் தாங்கிக்கொண்டார்கள், திருப்பூர் குமரனை பலியிட்டார்கள்—எல்லாம் நமக்குத் தெரியும். ஆனால் சுலபத்தில் பெறவேண்டியதை கடினமாக்கிக்கொண்டு விட்டார்கள். ஜின்னா ஆடை நலுங்கவில்லை. சிகரெட் புகைப்பதைக்கூட நிறுத்தவில்லை வளைந்து குழைந்து எவரிடமும் பேசவில்லை. தனது ராஜ தந்திரத்தால் அட்லாஸையே மாற்றியமைத்தார். இதற்கு இரத்தம் சிந்தவில்லை, ராஜ தந்திரத்தைக் கொண்டே சாதிக்க முடியாததைச் சாதித்தார். இவர்களோ கஷ்டப்பட்டார்கள். கஷ்டப்பட்டும் கேட்ட இந்தியா கிடைக்கவில்லை. பட்ட கஷ்டத்திற்கு பாராட்டுகிறோம். பெற்ற சுதந்திரத்தை நன் முறையில் நடத்தவேண்டும் என்கிறோம். வேறு பல சுதந்திர நாடுகளில் இம்மாதிரி எதிர்ப்புப் பிரச்சாரம் செய்கிறவர்களை சுட்டிருக்கிறார்கள். நாங்கள் விட்டு வைத்திருக்கிறோம் என்கிறார்கள். சுடாததற்குக் காரணம், ஜனநாயக உரிமை தருவதற்காகவல்ல, துப்பாக்கிப் பிடிக்கும் பழக்கம் இன்னும் வராததால்! ஆனால் அவர்கள் சுடப் பழகிக் கொள்கிற பொழுது நாங்கள், குண்டு பாய்ந்தாலும், மார்பைத் துளைக்காத மார்க்கம் காண்கிற அளவு வளர்ந்துவிடுவோம்.

சுதந்திரம் பெற்று தந்தார்கள் என்பதற்காக, எங்கள் வாழ்வைச் சூறையாடவும் அனுமதிக்க முடியுமா? வீடு கட்டுகிறான் கொற்றன் — அதற்காக மாலையிடுவோம், மரியாதை செய்வோம். பரிசு தருவோம். ஆனால் மறுநாள் இரவே கையில் கன்னக் கோலோடு வந்து திருட முயற்சி செய்தால் விடமுடியுமா?

சுயராஜ்ய கர்த்தாக்கள் இவர்கள் என்றாலும், வாழ்வை நசுக்க அனுமதிக்க முடியுமா?

இவர்களிடம் வீரமில்லையென்பது மட்டுமல்ல ஆளும் விவேகமும் இல்லை. நிர்வாகத் திறமையில்லை என்பதற்கு எவ்வளவோ உதாரணங்கள். கிடைத்த நேரத்தில் மிருகம் சாப்பிடும்—தேவைப்பட்ட நேரத்தில் உண்பான் மனிதன். இவர்கள் ஆட்சியில் மனிதன் மிருகமாகிறான். ஒரு விஷயத்தில் மட்டுமல்ல உணவு, உடை, சகல வசதிகளிலும் இதே நிலை! 'டெல்லி' மந்திரிகளுக்கோ ஆளவும் தெரியவில்லை.

நாம் திராவிடநாடு பிரிந்தால் இன்னின்ன நன்மைகள் என்று சொல்கிறோம். அதுபோல, திராவிடநாடு கூடாது என்பவர்கள், சேர்ந்திருப்பதால் உள்ள நன்மைகளைச் சொல்லட்டும்—பிரிந்தால் வரும் நஷ்டங்களை எடுத்துக் காட்டட்டும். இங்கே எல்லாம் வடநாட்டு சாமான்கள்—ஆணி முதல், பெரிய தண்டவாளங்கள் வரை டாடாவினுடையது—சிமெண்ட் டால்மியாவுடையது. பஜாஜ், பிர்லா ஆடை—இப்படி எல்லாம் அவர்கள் பொருள்களுக்கு திராவிடநாடு 'மார்க்கட்டாக' மாறி விட்டது. மூலப் பொருள்கள் எல்லாம் வடநாட்டுக்குப் போய் விடுகின்றன. ஆகவே தொழில்வளம் இல்லை. எனவே தொழிலாளிக்கு வேலையில்லை.

இத்தகைய நிலைமைகளை ஆய்ந்தோய்ந்து பார்ப்பவர்கள் எவரும் இந்திய மத்திய ஆட்சி தென்னாட்டிற்குத் தேவையென்று சொல்லமாட்டார்கள். திராவிடநாடு பெறுவது நம் பிறப்புரிமை. தடுத்துப் பேச பலம் இருக்கலாம், அவர்களுக்கு—ஆனால் இறுதி வெற்றி நமக்குத்தான். நம் உரிமையைப் பறிக்க எவராலும், எவ்வித பயங்கரச் சட்டத்தாலும் முடியாது!"

ஏடு நடத்துவோருண்டு சுயவிளம்பரங்கருதி; இன்னும் சிலரோ இலாப வேட்கையோடு நடாத்துவதுமுண்டு; தினமும் ஏதாவது பித்தலாட்ட பிழைப்புநடத்தி திகைப்பிலாழ்த்தும் பத்திரிகாசிரியர்களும் இல்லாமலில்லை. இப்படிப்பட்ட ஆசிரியர்களையும், சமுதாய வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்திடாத பத்திரிகைகளையும்பற்றி சுவைபட இங்கே சித்தரிக்கப்படுகிறது.

# "போ! போ! வா! வா!"

○

"பைத்தியக்காரா! பத்திரிகையா இது! கையளவுகூட இல்லையே, இதைக் கையிலே எடுத்துவைத்துக் கொள்வதற்குக்கூட வெட்கமாகயில்லை?"

"அளவு எப்படியிருந்தாலென்ன? அழகைப் பார்த்தா பத்திரிகையை மதிப்பிடுவது நாட்டவர் விரும்புவது கருத்தைத்தானே!"

"கருத்தாவது, மண்ணுங்கட்டியாவது...காசுவந்து சேருமா இதன் மூலமாகவெல்லாம். என்னைப் போன்ற பெரிய மனிதர்களெல்லாம் கண்ணால் பார்ப்பதற்கே கூசும்போது, வாங்கிப் படிப்பதெங்கே? சரியான அச்சுக்கூடப் பதியவில்லையே! பக்கத்துக்கு ஒரு படமாக இல்லாவிட்டால் போகிறது, பத்திரிகை முழுவதற்குமாகச் சேர்த்து ஒரே ஒரு படமாவது போட்டிருக்கக்கூடாதா? உனக்கெங்கே பிழைக்கும் வழி தெரியப்போகிறது. உன் விதி அப்படி. நான் உன்னை நொந்து கொள்வானேன்."

"என் விதி மட்டுமல்ல; நமது விதியை மாற்றுவதற்காகத்தான் இந்த ஏடு துவக்கப்பட்டிருக்கிறது. தங்களைப்போன்ற பெரியவர்கள் முதலிலே பாராட்டமாட்டார்களென்று எனக்குத் தெரியும். ஆனாலும், நல்லது நடைபெறும் முயற்சிக்குத் தடையாகயிருப்போர் வெற்றி பெற்றதில்லை. நாலாறு வர்ணத்திலே அச்சிடப்பட்டு வெளியாகும் ஏடுதரும் சேதியைவிட இந்தச் சின்னஞ்சிறு வெளியீடு தரும் சேதிகள் மிகமிக அதிகமே. அங்கே பார்க்காத நிகழ்ச்சிகளை இங்கே படிக்கமுடியும், வண்ணமல்ல முக்கியம், எண்ணமே! நாட்டுக்குத் தேவையான நல்லெண்ணங்களைச் சுமந்துவரும் தூதுவன் எனது ஏடு, இதற்கில்லை ஈடு என்றுதான் நான் நம்புகிறேன்."

"உனது நம்பிக்கை நாசமாகப் போக. இப்படியா அடக்கமில்லாமல் என்னிடம் பதில் கூறுவது! ரயில்வே கால அட்டவணைகூட எவ்வளவு அழகோடு குற்றாலத்தின் குளிர்ச்சியோடு கொடைக்கானல் கவர்ச்சியோடு அச்சிடுகிறார்கள். போயும் போயும் படித்த நீ, பட்டம் வாங்கிய நீ இப்படியா நடத்தத் துவங்குவது. எவ்வளவோ கெட்டிக்காரன் எதையுமே சமர்த்தாகச் செய்வாயென்றல்லவா கருதினேன். மோசம் போய்விட்டாயே, தம்பி. அடுத்த இதழ் அச்சடிக்கக் காகிதம் கிடைக்காதே உனக்கு. இப்போது ஏதோ சாக்குப்போக்கு சொல்லி கடனைக வாங்கி வந்துவிட்டாய். அடுத்த இதழுக்கு அச்சுக்கூடத்தருகே கூட உன்னால் செல்லமுடியாது."

இலட்சியத்தை எடுத்துச் சொல்கிறபோது இதற்கெல்லாம் பயந்தால் முடியுமா? தொல்லைகளை நினைத்து அறைக்குள்ளேயே அடங்கிக்கிடப்பது முறையோ? எதிர்ப்பாளர்களைக் கண்டு அசந்துவிடுபவன் அறப்போர் முறைகளைக் கற்றுத் தேர்ந்தவனாகயிருக்கமுடியாதே! புலி வேட்டைக்குப் புறப்பட்டவன் எலிகளைக்கண்டே நடுங்கினால்...? என் பணி பாதையிலே தொடர்ந்து போவதுதான். பாதியிலேயே நின்றுகொள்வதல்ல!"

"உனது இலட்சியத்தின் இலட்சணம்தான் இதோ புரிகிறதே...... இந்தப் பத்திரிகையிலுள்ள தலைப்புகளை நீயேதான் படித்துப் பாரேன்.

வாழ்வா? சாவா?

உரிமைக்குப் போராடு!

நாடு நமதாக நல்லவரே திரண்டு வாரீர்!

முதலாளித்துவத்துக்கு முட்டுக் கொடுக்கும் பத்தாம்பசலிகளுக்கு எச்சரிக்கை!

வர்ணாஸ்ரமம் ஒழிக! வால் பிடிக்கும் கூட்டம் ஒழிக!......

பார்த்தாயல்லவா; மீண்டும் ஒரு முறை படித்துப்பார். கட்டுரைத் தலைப்புகளாக இருக்கவேண்டியவையா இவைகளெல்லாம். தலையங்கமென்று மாற்றுப் பெயரிலே எழுதியிருக்கிறாயே, எழுத்தா அது. பேனா உன்னிடம் சிக்கிக்கொண்டு படாதபாடு படுகிறதப்பா!

காவடி தூக்கிகளே! காவடி தூக்கிகளே!......நல்ல தலையங்கமப்பா இது. படிக்கப் படிக்க டில்லி நோக்கிக் காவடி தூக்குபவர்களைப் பற்றியல்ல, உமது புத்தித் தெளிவைப் பற்றித்தான் பரிதாபப்பட முடிகிறது. இதுதான் போகட்டும்.

## மா. தங்கவேலர்

கதையென்று சொல்லி இரண்டு பக்கத்திலே எதையோ எழுதி இடத்தை அடைத்திருக்கிறாய். கதை எழுதுவது இப்படித்தானா? ஜாதிவிட்டு ஜாதி கல்யாணம் செய்துகொள்ளும் அபத்தத்தையல்லவா கதையாக நீட்டி எழுதியிருக்கிறாய். இதைப்போய் படிப்பதற்கா நேரத்தை செலவிடப் போகிறார்கள்."

"கதையல்ல, அய்யா! கசக்கப்படும் ஏழையின் வாழ்வு அது. பேசும் நெஞ்சத்தை அங்கே காட்டியிருக்கிறேன். சாகசத்தால் சமுதாயத்தை சீரழிக்கும் நாச நெஞ்சத்தினரை உலகுக்கு நான் அறிமுகப் படுத்தும் முயற்சி அது, மருந்து கசந்தாலும் நோய் தீருகிறதல்லவா. இந்த கதையும் அப்படித்தான்,"

"சமுதாயத்தையும், அதைத் தூண்போல நின்று காத்துவரும் ஆத்திக மணிகளையும் தாக்கிடும் வலிமை உனக்கிருக்கலாம், ஆனால் அது உனது ஏட்டுக்கு இருக்கமுடியாது, சாவதற்காக வழி தேடுவாருண்டோ? போகும் பாதை மறந்து எங்கோ பயணம் துவக்கிவிட்டாய். போ! போ! அறுவடையை அனுபவி போ!"

போ, போ என்றுதான் நாட்டு நடப்டைத் தெரிந்தகாகக் கூறிக்கொண்ட 'பெரிய புள்ளி' கர்ஜித்தார். புதுமை ஏடு துவக்கியிருந்தவரோ திகைத்து நின்றார், ஒரே விநாடிதான். பிறகோ சிரிப்பு வந்தது அடக்கமுடியாமல். 'பெரும் புள்ளி'யின் முன்னே நீட்டிய பத்திரிகையைத் திரும்பப் பெற்றுக் கொண்டு படியிறங்கினார். அந்த நிலைகண்டு 'பெரும் புள்ளி'யும் சிரித்தார். போ! போ!...என்ற அவரின் முழக்கம் சுவரிலே மோதி எதிரொலித்தது.

படியிறங்கிவந்த பத்திரிகை ஆசிரியர் திரும்பிப்பார்த்தார். அந்தப் 'போ—போ' முழக்கம் தேய்ந்து கொண்டிருந்தது. நடந்துகொண்டிருந்தார் ஆசிரியர். 'வா—வா'... என்று யாரோ அழைத்தார்கள். யார் அழைத்தது? நெருங்கிச் சென்றார் ஆசிரியர். ஓரிருவரா அழைத்திருந்தனர். மிகப்பெரிய கூட்டமே கூடி நின்றதல்லவா— வா, வாவென்று வாழ்த்தி வரவேற்றது. யார் அவர்களெல்லாம் சாமானியர்கள். ஆனால் சக்தி மிகப் படைத்தவர்களென்பதை அவர்களது முழக்கமே காட்டியது. ஒட்டிய உடல்கள், வெட்டிப் பிரித்தாலும் சாயாத உறுதி படைத்த உள்ளங்கள். அவர்கள்தான் வாழ்த்துப்பா இசைத்தனர். இப்போது அந்த ஆசிரியர் போய்வந்த இடத்தையும், அங்கிருந்து கிளம்பி எதிரொலித்த போ—போ ஒலியையும் நினைத்துப் பார்த்தார்.

போ! போ!! ஆமாம் அந்த ஒலியை முழக்கியவர்களெல்லாம் மேட்டுக்குடியினர்; மிட்டா மிராசுகள்; பங்களா சுகம் பெற்று பாங்காக வாழ்பவர்கள்!

வா! வா!! என்று கூறியவர்களெல்லாம், வாடி வதங்கியவர்கள், ஓடித் தேய்ந்தவர்கள்.

யாருக்காக அந்த ஆசிரியர் பேனா தூக்கினாரோ அவர்கள் வாழ்த்தினர். எதை ஒழிக்க வேண்டுமென்று நினைத்தாரோ அங்கிருந்துதான் பகை புகைந்தது. இயற்கை தானே! மலரைத் தொட்டால் மணமும், முள்ளைத் தொட்

(8-ம் பக்கம் பார்க்க)

## அறிஞர் அண்ணா அவர்களின் வாழ்த்து

●

திராவிட இயக்கத்திலும், சிறப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்திலும் பெரும்பணியாற்றி மக்களுடன்—கழகத் தோழர்களுடன் நெருங்கிய—நீங்காத தொடர்பு கொண்டுள்ளவர் அருமை நண்பர் என். வி. நடராசன்.

அவரை ஆசிரியராகக் கொண்டு கடந்த பதினன்கு ஆண்டுகளாக பல நெருக்கடிகளையும் தாங்கி நின்று தளராது அரும்பணியாற்றிவரும் "திராவிடன்" தொண்டு திராவிடப் பெருங்குடி மக்களுக்கும் கழகத்திற்கும் நல்வாய்பாக இருந்துவருகிறது. இப்பணியை என்னைப் போலவே பலரும் பாராட்டுவர்.

திராவிடன், தனது பதினைந்தாம் ஆண்டுப்பயணத்தில் புத்தம்புதிய அம்சங்களுடன் தொண்டாற்றப்போவதாக அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன். கழகத் தோழர்கள் அம்முயற்சிக்குப் பேராதரவுதந்து திராவிடன் இதழை வலிவும் பொலிவும் உடையதாகச் செய்யவேண்டுகிறேன்.

வாழ்க திராவிடன்!

அன்பன்,

**அண்ணாதுரை**

# இதுதான்...

கியூபாவில் அமெரிக்கச் செல்வாக்கு அறைகூவலுக்குள்ளான பிறகு, லாவோஸ்—காங்கோ நாடுகளில் ரஷ்யாவின் இராஜதந்திரம் தோல்வியுற்றதை அடுத்து, இரு நாடுகளுமே எதிரும் புதிருமாக நின்று போராட பெர்லின் நோக்கிப் புறப்பட்டுவிட்டிருக்கின்றன.

தனது போராட்டக் களமாக கியூபாவைத் தேர்ந்தெடுக்க ரஷ்யா விரும்பவில்லை. அதேபோல், இரண்டிலொன்றைத் தீர்த்துக் கொள்ளும் இறுதிப் போராட்டத்தை லாவோசில் துவங்க அமெரிக்கா தயாராக இல்லை. ஆகவே, இருவருக்கும் பொருத்தமாக எல்லாவகையிலும் 'சிறந்து' விளங்கும் பெர்லினைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு, இந்த உலகத்தை இழுபறிக்குள்ளாக்க இருவருமே கட்டியங்கூறி நிற்கின்றனர்.

"எங்களை எதிர்த்துக் கரம் உயர்த்துவோர் மட்டுமல்ல, அவர்கட்குத் துணைநிற்கும் அத்தனை பேரும் அழிவுக்குள்ளாக வேண்டியவர்களே. ஆறு ராக்கெட்டுகளை அனுப்பி அனைவரையும் தீர்த்துக் கட்டிவிடமுடியுமென்றாலும், நாங்கள் பன்னிரெண்டு ராக்கெட்டுகளை எதற்கும் தயாராக வைத்திருக்கிறோம்" என்று முழக்குகிறார், குருஷ்சேவ்!

"நாங்கள் போர் துவக்க விரும்பவில்லை. எனினும் நாங்கள் இதற்கு முன்னால் போரிட்டுப் பயிற்சி பெற்றவர்கள். படுசுயநலமான — மிக மெதுவான—மற்றவர் சுதந்திரத்தைப் போட்டுமிதிக்கமுனைவோரை எதிர்த்து நிற்பதில் பிளவுபட்ட மனப்பான்மை கொண்டவர்களாக எங்களைச் சிலர் கடந்த காலத்தில் இப்போதுள்ளவர்களைப் போன்று கணித்துக் கணக்கிட்டுக் கவிழ்ந்திருக்கின்றனர்!" என்று எதிரடி கொடுக்கிறார், கென்னடி!

வானவெளியில் பதினேழுமுறை உலகத்தை வலம்வந்து திரும்பிய எர்மான் டிடோவ் ஒருவரே அமெரிக்கரைக் கதிகலங்க அடிக்கப் போதுமான ஆயுதமாக குருஷ்சேவ் நினைக்கிறார். அதனால்தான், "இந்த அமெரிக்கர்கள் ஏன் எம்பிக் குதித்துப் பறப்பதாகப் பாவனை செய்து கடலில் விழுகின்றனர்" என்று கேலியும் பேசினார்!

இந்தக் கேலிமொழிக்கும் பயமுறுத்தலுக்கும் அமெரிக்கர் அசைந்து கொடுப்பதாகக் காணோம்! ஏனென்றால், வானவெளியில் பறப்பதென்பது ஒருநாட்டாருக்கு மட்டுமே உரிமையானதாகவும் முடியக்கூடியதாகவும் ஆகும் என்பதை அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. அணு ஆயுதம் அவர்கள் கையில் இருந்தபோது, அவர்கள் மற்றவர்களிடம் காட்டிய அச்சுறுத்தல், இப்போது கேலிக்குரியதாக ஆகிவிட்டிருப்பதைக் கண்கூடாகக் காண்பவர்கள் அவர்கள்.

ஆகவேதான், வானத்தில் வட்டமிடுவதில் யார் முன்னேறி நடக்கிறார்கள் என்பதை இதற்குள் தீர்மானிக்க வேண்டாம். 'இந்த மண்ணிலேயே நாம் தீர்மானிக்கவேண்டியவை பல இருக்கின்றன. அவைகளில் முதன்மையானதாக பெர்லின் பிரச்சினையை எடுத்துக்கொள்வோம்' என அமெரிக்கப் பத்திரிகைகள் அறைகூவல் விடுக்கின்றன.

கடந்த பதினைந்து ஆண்டுக்காலமாக உலகத்தை அலைக்கழித்து வந்த 'கெடுபிடிப் போர்' இப்போது கொதித்துப் பொங்கிவழியும் நிலைக்குச் சென்றிருப்பதை, மனித குலம் பீதியுடன் நோக்குகிறது.

உலகத்தின் இரு வல்லரசுகள் மறைமுகமாக—யாராவது ஓர் தரகரைக் கொண்டே நடத்திவந்த 'கெடுபிடிப் போரை' எதிர்எதிராகவே நின்று பலப்பரீட்சைப் பார்த்துக் கொள்ளும்வகை செய்துவிட்டிருக்கிறது ஜெர்மானியத் தலை நகராக இருந்த பெர்லின்!

இந்த பெர்லின், நெடுங்காலமாக மத்திய ஐரோப்பாவின் ஒளிவிளக்காகவும் இருந்திருக்கிறது; உலகத்தை இருட்படலத்தில் போர்த்தும் பயங்கர பூதங்கள் உற்பத்தியாகும் இடமாகவும் இருந்திருக்கிறது.

காலத்தால் அழியாத கலைஞர்களை—இலக்கியங்களை உற்பத்தி செய்திருக்கிறது; காலத்தையே ஓர் முடிவுக்குக் கொண்டு — வரும் அழிவுச் சக்திகளை அது பெற்று வளர்த்து உலா வரவும் விட்டிருக்கிறது! மனித நம்பிக்கைகளை அது வளர்த்தும் — இருக்கிறது; அதே மனிதன் எத்தனை நாள் நாம் வாழ்வோம் எனப் பயந்து காலங் கழிக்கவும் செய்திருக்கிறது. அதனைப் போல் மிகக் குறுகிய காலத்தில் வளர்ந்த நகரம் இல்லை; அதனைப்போல் மிகக்குறுகிய காலத்தில் மனிதப் பூண்டையே அழிக்கக் காரணமாக ஆகக்கூடிய சக்திகளை உள்ளடக்கிய நகரமும் இல்லை.



1945-ஆம் ஆண்டுவரையில் பெர்லின், ஜெர்மனியின் தலைநகராக இருந்துவந்தது. இரண்டாம் உலகப்போருக்கு அப்பால்—ஜெர்மன் இராணுவம் சரணடைந்ததும்—வெற்றிபெற்ற நாடுகளின் அதிகாரத்திற்கு அது உள்ளானது. இப்போது அது ஜெர்மனியின், 'தார்மீகத்' தலைநகராக இருக்கிறது என்றாலும், இருவல்லரசுகள் தங்கள் தங்கள் 'பெருமைகளை'க் காட்டிக்கொள்ளப் பயன்படும் களர்நிலமாகவே அது பயன்படுகிறது!

மனிதகுல நாகரிகத்திற்கு எவ்வளவோ சிறப்புக்களைச் சேர்த்த பெர்லின் நகரம், இதுபோல் பரிதாபகரமாக உருமாறியதற்குக் காரணம் அது தலைநகராகவிருந்த ஜெர்மானிய நாட்டின் நிலை மாறியதுதான்!

ஜெர்மனி பன்னெடுங்காலமாக உறுதியான—அறுதியிட்ட எல்லைக் கோடுகளைக் கொண்டு வாழ்ந்தது கிடையாது. இயற்கை வளங்களும் அவ்வளவாக அந்த நாட்டில் இல்லாததால், அது சுற்றுச் சார்பு நாடுகளை — அல்லது பகுதிகளை ஏதாவது ஓர் வகையில் ஆதிக்கத்திற்குட்படுத்தித்தான் அது தன் னிறைவுகொள்ளக் கூடிய நாடாக இருந்துவந்திருக்கிறது. இந்த காரணத்தாலேயே, அது போரார்வம் கொண்ட—மற்றவர்களை அடக்குவதில் அதிக நாட்டங்கொண்ட சமுதாயத்தைக் கொண்டதாக அது சரித்திரத்தின் கண்களுக்குத் தெரிவதாக ஆகிவிட்டிருக்கிறது.

ஜெர்மனி, ஒரு தலைமுறை காலத்திலேயே இரு உலகப்போர்களைத் தொடங்கி தோல்வியுற்றிருக்கிறது. ஏறக்குறைய 90 இலட்சம் மனிதர்களை அது இழந்திருக்கிறது. இருபத்தைந்து ஆண்டு காலத்திற்குள்ளாக அந்த நாட்டு மக்கள், இரண்டு மூன்று முறை தங்கள் நாணய மதிப்பும் நாட்டின் பாதுகாப்பும் தொண்ணூறு சதவிகிதம் கீழிறங்கிமதிப்பற்றுப் போனதை அனுபவித்திருக்கின்றனர். 1945ல் இரண்டாம் உலகப் போர் முடிந்ததும் ஜெர்மனி முழுவதும் வெற்றி பெற்ற படைகளின் ஆதிக்கத்துக்குட்படுத்தப்பட்டது. இலட்சக் கணக்கான ஆண்களும் பெண்களும் நேசப் படைகள் புகாமல் எஞ்சி நிற்கும் ஜெர்மானியப் பகுதிகளில் அடைக்கலம் புகுந்தனர். அந்தப் பகுதியும் பின்னர் குண்டுமழைக்குத் தப்பவில்லை.

இறுதியாக, ஜெர்மனியின் இராணுவம் நேச நாடுகளிடம் சரணாகதியடைந்தது.

ஜெர்மானிய இராணுவ அமைப்புத்தான் போர்புரியச் சக்தியற்றுச் சரணடைந்ததாக சட்டப்படி இப்போது கொள்ள முடியுமே தவிர, ஜெர்மானிய அரசாங்கம் நேச நாட்டு அரசுகளுடன் சமாதான உடன்படிக்கைச் செய்துகொண்டதாக ஆகாது. ஏனென்றால், நேச நாட்டுப் படைகள் ஜெர்மனியில் நுழைந்தபோது அங்கு அரசாங்கம் என்று ஒன்று இருக்கவில்லை. ஆகவேதான், தற்போது போர் முடிந்து பதினைந்து ஆண்டுகாலமாகியும் சமாதான உடன்படிக்கைச் செய்துகொள்ள முடியாத நிலையே அங்கு நிலவுகிறது. ஜெர்மானிய இராணுவம் போர் புரியத் திறனற்று நிலைநின்று விட்டிருப்பதாகவே தற்போது பொருள். நாளையே அது இதே நேச நாடுகளுடன் மீண்டும் போர்தொடுக்கப் புறப்பட்டால், அதனைத் தட்டிக்கேட்டு அநியாயம் என்று சொல்ல சர்வதேசச் சட்டம் இடங் கொடுக்கவில்லை.

பலம் இழந்துபோன காரணத்தால் ஜெர்மானிய இராணுவம் தான் போரை முடித்துக் கொண்டதே தவிர, ஜெர்மானிய அரசு அதனைச் செய்யவில்லை. அதேபோல், ரஷ்யா, பிரான்ஸ், இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய அரசுகளின் சார்பிலும் இதுவரையில் அதிகாரபூர்வமாக ஜெர்மனி சரணடைந்து சமாதான உடன்படிக்கைச் செய்துகொண்டதற்கு ஒப்பமிடவில்லை. நடந்ததெல்லாம் இவைதான்—

நாசிசத்தின் தலைவர்களில் தற்கொலை செய்துகொண்டோ அல்லது ஓடி ஒளிந்தோ அல்லது போரில் அடிபட்டுச் செத்தோ மறைந்தவர்கள்போக, ஜெர்மானிய இராணுவத்தின் சார்பில் பரிந்து பேச யோக்கியதை படைத்தவர்களாக, அட்மிரல் டோனிட்ஸ், ஜோடல், பீரீட்பெர்க் என்பார் மட்டுமே எஞ்சியிருந்தனர்.

இவர்களில், ஜோட்டல், பிரீட்பெர்க் ஆகியோர் ஜெனரல் ஐசனேவரின் தலைமைக் காரியாலயத்தில் 1945 மே மாதம் 7-ம் நாள் 2.41 (மத்திய ஐரோப்பிய மணி) மணிக்கு ஜெர்மனி சரணமடைந்ததாகக் கையொப்பமிட்டனர்.

அனைத்துப் படைகளின் அதிகாரியாக விளங்கிய ஐசனேவர் சார்பில் அவருடைய இராணுவப் படைத் தலைமை அதிகாரி ஜெனரல் வால்டர் பெடல்ஸ்மித் (இவர் கடந்த வாரம்தான் இறந்தார்) என்பார் கையொப்பமிட்டார். ரஷ்ய இராணுவக் குழுவின் தலைவரான ஜெனரல் ஐவான் சுஸ்லபாரோவ் என்பவரும், பிரான்சின் இராணுவ அதிகாரி ஜெனரல் சீவெஜ் என்பாரும் சாட்சிகளாக அதில் கையொப்பமிட்டனர்.

இதுதான் முறையான சட்டபூர்வமான இரண்டாம் உலகப் போர் முடிவுற்றதற்கான ஒப்பந்தம்!

போராடச் சக்தியற்று விட்ட போது இராணுவம் செய்துகொண்ட ஒப்பந்தம் இது! மீண்டும் அதே இராணுவம் தலையெடுத்தால், அது மீண்டும் போர் தொடங்குவதற்கு எந்த அரசாங்கமும் எதிர்த்துப் போராடுவதைத் தவிர ஏன் என்று கேட்கமுடியாது!

இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில்தான் தோல்வியுற்ற ஜெர்மனி நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, அமெரிக்கா, பிரிட்டன் பிரான்ஸ், ரஷ்யா ஆகிய இராணுவங்களின் ஆதிக்கத்தின் கீழ் ஆளுகைக்கு உட்பட்டது.

மேற்குநாடுகள் மூன்றும், போர்க்காலத்தில் தாங்கள் ஊடுருவி வந்த ஜெர்மானிய நாட்டின் மேற்குப்பகுதியில் 95 ஆயிரம் சதுர மைல் கொண்ட பரப்பையும், ரஷ்யா ஊடுருவிச்சென்ற கிழக்குப் பகுதியில் சுமார் 86 ஆயிரம் சதுரமைல் பரப்பை ரஷ்யாவும் பகிர்ந்துகொண்டு ஆட்சி துவங்கின.

மேற்கு வல்லரசுகளின் ஆளுகைக்கு உட்பட்ட மேற்கு ஜெர்

# 'பெர்லின் !'

மரியில், படிப்படியாக அமைதியும் சட்டத்தைப் பரிபாலிக்கும் பக்குவமும் ஏற்பட்டதும், மேற்கு ஜெர்மனியின் பொறுப்பு வாய்ந்த பகுதியை நிர்வகித்துவந்த தலைவர்களிடம் (ஜெர்மானியர்) 1948-ல் பார்லிமெண்ட் கவுன்சில் எனச் சொல்லத்தக்க ஓர் சபையைக் கூட்டி, தற்காலிகமான அரசியல் சட்டமொன்றினை உருவாக்கி அதன் படியே மேற்கு ஜெர்மனியின் அரசாங்கம் அமைய வழிகோலிற்று.

இந்தத் தற்காலிக அரசியல் சட்டம் 1948 மே 24-ஆம் நாள் முதல் அமுலுக்கு வந்ததாக அறிவிக்கப்பட்டு, அதன்படியே ஆட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் நடைபெற்றன. (இவ்வளவையும் ஜெர்மானியர்கள் சுய ஆட்சி அடைவதற்கான முதற்படிச்செயல்களாக மேற்கு நாடுகள் மூன்றினுடைய இராணுவ நிர்வாகமே முன்னின்று நடத்திவைத்தது)

தற்காலிக அரசியல் சட்ட திட்டப்படி நடைபெற்ற பொதுத்தேர்தலுக்குப் பின்னுல், அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து ஆகியநாடுகளின் இராணுவ அதிகாரத்தில் இருந்த பகுதிகள் அனைத்தையும் முறைப்படி நிர்வகிக்கக்கூடிய அதிகாரம் பெற்ற ஓர் ஜெர்மானிய அரசாங்கம் ஏற்பட்டதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதற்கு ஜெர்மானிய குடியரசுக் கூட்டாட்சி எனப் பெயரிடப்பட்டது.

அந்த அரசாங்கத்தின் தலைநகராக பான் இருந்துவருமென்றும், ரஷ்ய இராணுவத்தின் கீழுள்ள மற்ற பகுதி மக்களும் ஒன்றுபட்டு வாக்களித்து அரசாங்கத்தைத் தேர்ந்தெடுக்கும் நிலை வரும்வரை தற்போதுள்ள அரசியல் சட்டத்தையே ஒரு சுதந்திரமான நாட்டின் அரசியல் சட்டமாகப்பாவித்து அதன்படி அமையும் அரசாங்கத்தை சுதந்திரமான அரசாங்கமாகப் ஏற்பது என்றும் மூன்று வல்லரசுகளும் ஏற்றுக்கொண்டன.

ஒன்றுபட்ட ஜெர்மனியாக உருவாகும் வரையில் பெர்லின் 'தார்மிகத்' தலைநகராகவே இருந்துவருவதென்றும், அரசாங்கத் தலைநகராக பான் இருந்து வருவதெனவும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

1949-இல் ஏற்பட்ட இந்த அரசாங்கம், 1954 வரை வெறும் நிர்வாக சபையாகவே இயங்கிவந்தது. வெளியுலகத் தொடர்பு இராணுவம் போலீஸ் போன்றவை மேற்கு அரசுகளின் கையிலேயே இருந்தன. 1954 அக்டோபர் 23-ஆம் தேதியன்று பாரிஸ் நகரில் செய்யப்பட்ட ஒப்பந்தமொன்றின்படி, மேற்கு ஜெர்மனியின் குடியரசுக் கூட்டாட்சி ஓர் சுதந்திர நாட்டின் சொந்த அரசாங்கமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, நாட்டோ ஒப்பந்த நாடுகளின் வரிசையில் இடம்பெற்றும், ஜெர்மனியின் பாதுகாப்பில் சொந்தமாக ஏற்பாடு செய்துகொள்ளும் உரிமையையும் அடைந்தது.

இந்த உரிமையைக் கொடுத்த தற்குப் பின்னுல், 1945-ல் செய்து கொண்ட உடன்படிக்கைப்படி தாங்கள் செயல்பட்டுவிட்டதாகவும், அதில் பங்குகொள்ள ரஷ்யா விரும்பாவிட்டாலும், தற்போது ரஷ்யாவின் அதிகாரத்திலுள்ள ஜெர்மன் பகுதிகளில், ஒப்பந்தப்படி தங்களுக்குப் பொறுப்பிருப்பதாகவும் மேற்கு அரசுகள் இப்போதும் சொல்லிவருகின்றன.

இதற்கிடையில் ரஷ்ய ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் தனிப்பட்ட கட்சியான கம்யூனிஸ்ட் கட்சி தவிர்த்த மற்றவற்றை அனுமதிக்க மறுத்துவிட்டதாலும் ரஷ்ய அரசாங்க முறைகள் பலவற்றை அந்தப் பகுதியில் அமுல் நடத்திவிட்டதாலும், மேற்கு வல்லரசுகள் செய்துகாட்டிய சீர்திருத்தத்தற்கு ரஷ்யா ஒத்துப்போக முடியவில்லை. சுதந்திரமான — இரகசிய வாக்கெடுப்புள்ள தேர்தலில் கலந்துகொள்ள ஜெர்மானிய மக்களை ரஷ்ய அரசாங்கம் அனுமதிக்கத் தயாராக இல்லை. மேலும், ஜெர்மானிய மக்களை அவ்வளவு விரைவில் சுதந்திரமான அரசாங்கத்தை அமைக்க விடுவது ஆபத்து எனவும் அப்போது ஸ்டாலின் கருதினர். ஆகவே ஒன்றுபட்ட ஜெர்மனியை உருவாக்குவதிலும் ஒன்றுபட்ட ஜெர்மனி தனக்கென படைபலத்தைப் பெறுவதும் — ரஷ்யா ஒப்புக்கொள்ள முடியாததாகிவிட்டதால், மேற்கு ஜெர்மனியில் குடியரசுக் கூட்டாட்சி என்ற பெயரில் அரசாங்கம் அமைந்தபோது, அத்துடன் ஒட்டமுடியாதது மட்டுமல்ல, தன்னிடமுள்ள பகுதியில் தன் கருத்துக் கொத்ததான ஓர் அரசாங்கத்தை ஏற்படுத்தும் நிலைக்கும் ரஷ்யா தயாரானது.



இந்த நிலைதான் தற்போதுள்ள கெடுபிடிப்போரின் ஆரம்ப கட்டம்! இதிலிருந்துதான், போர்க்காலத்தில் நெருங்கிப் பழகிய நட்பையும் மறந்து மேலை அரசுகளும் ரஷ்யாவும் புலியும் பூனையுமான 'துரதிர்ஷ்டம்' பிறந்தது.

மேலை அரசுகளின் 'ஆசி' பெற்ற ஜெர்மானியக் கூட்டாட்சிக்கு எதிராக ரஷ்யாவும் — கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கியஸ்தர்களை அதிபர்களாகவும் அமைச்சர்களாகவும் பிடித்துப் போட்டு ஜெர்மானிய ஜனநாயகக் கூட்டாட்சி என்ற பெயரில் பாங்கோவ் என்ற நகரைத் தலைநகராகக்கொண்டு ஓர் அரசாங்கத் தோற்றுவித்தது.

ஒடுக்கி அடக்கப்பட்ட நாட்டில் ஆட்சி நடத்தப்போய், அங்கே தன்னுடைய மரியாதையையும், பெருமையும் பரிபோகும் நிலைக்கு ஆளாக்கியதாகப் பரஸ்பரம் இரண்டு சக்திகளுமே குறை சொல்லி அவ்வப்போது ஒன்றுக்கொன்று எதிரடி கொடுக்கத் தொடங்கிவிட்டன.

ஜெர்மனி முழுமைக்குமாகப் பரிந்துபேச குடியரசுக் கூட்டாட்சிதான் யோக்கியதை பெற்றதாகும் என்பது மேலை அரசுகளின் வாதம்.

கிழக்குப் பகுதியையும், அதில் ஏற்பட்டிருக்கும் அரசாங்கத்தையும் கலக்காது செய்யும் முடிவு எதுவும் ஜெர்மனி முழுமைக்கும் பொருந்தும் எனச் சொல்வது பொருந்தாது ரஷ்யாவின் வாதம். சுதந்திரமான—இரகசிய வாக்கெடுப்பில் கலந்து கொண்ட ஜெர்மானிய மக்கள் தேர்ந்தெடுத்தது குடியரசுக் கூட்டாட்சி, ஆகவே அது ஜெர்மானியரின் உள்ள உணர்வினைப் பிரதிபலிப்பதாகக் கொள்ளமைத் தவிர வேறு எதுவாகவும் இருக்க முடியாது! என்பதில் மேலை அரசுகள் தளராதஉறுதி காட்டியும், கிழக்கு ஜெர்மனியில்ரஷ்யா அமைத்துள்ள அரசாங்கத்தை, ஒரே கட்சியின் பாசிச தர்பார் என்றும், அகில ஐரோப்பாவையும் எடுத்து விழுங்கி ஏப்பம் விடுவதற்கு ஆழம்பார்க்கும் கருவியாகவே அது ரஷ்யாவுக்குப் பயன்படுகிறது என்றும் சொல்லிவருகின்றன.

அதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில், மேற்கு ஜெர்மனியில் மேலை அரசுகள் அமைத்துள்ள அரசாங்கம் வெறும் பொம்மை அரசாங்கம் என்றும், தோல்வியுற்ற நாஜிச இராணுவ வெறியர்கள் களைப்பாறும் மண்டபமென்றும்மீண்டும் பேரர் துவக்கி சுற்று வட்டார நாடுகளைப் பழி வாங்கத்துடிக்கும் ஜெர்மானிய இராணுவ பூதத்தின் பாதுகாவலன் என்றும் ரஷ்யா குற்றஞ் சாட்டுகிறது. இவைகளுக் கிடையில் "தற்காலிகமான தர்மகர்த்தாப் பொறுப்புடன் கூடிய ஓர் அமைப்புத்தான். தனது ஆட்சி. ஆனல், ஜெர்மனி முழுமைக்குமாகப்பேச தனக்கு உரிமை உண்டு. ஏனென்றல் மக்களே விரும்பி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்கள் மனமுவந்து அளிக்கும் வரிப்பணத்தில் வாழ்வதாகும்" என்று குடியரசுக் கூட்டாட்சி நிர்வாக முதல்வர் டாக்டர் அடினர் பலறைசாற்றுகிருர்.

மேற்கு ஜெர்மனி அரசாங்கத்தைக் குறித்து ஆயிரம் குறைகள் சொல்லி வந்தாலும், 1955ல் சோவியத் ரஷ்யா இத்த அரசாங்கத்தை ஒப்புக்கொண்டு அரசாங்கம் பிரதிநிதிகள் பரிமாற்றத்தையும் செய்து முடித்தது என்பதுதான், சோகமயமான கெடுபிடிப்போர் சூழ்நிலையில் வாய்விட்டுச் சிரிப்பதற்கு வாய்த்த சந்தர்ப்பம்!

—(தொடரும்)

மு.சண்முகம்

---

கலைஞர்

## கருணாநிதி வாழ்த்து

—(0)—

"திராவிடன்" 15-வது ஆண்டு துவக்கத்தில் அடியெடுத்து வைத்து புதிய தெம்புடனும் நல்ல வலிவுடனும் நடைபோட துவங்கியிருப்பது கண்டு பெருமகிழ்ச்சியடைகிறேன். கழகத்தின் நீண்ட நாளைய கொள்கைத் தங்கமாகவும், தொண்டர்க்குத் தொண்டராகவும், தலைவர்களில் ஒருவராகவும், கழகத்தைக் கட்டிக்காக்கும் பொறுப்புமிக்கவர்களில் ஒருவராகவும், விளங்குகின்ற எனது அருமைத் தோழர் என். வி. என். அவர்கள் தனது சீரிய முயற்சியினுல் 14 ஆண்டு காலம் "சிறுகக்கட்டி பெருக வாழ்" என்னும் இலக்கணத்திற்கு எடுத்துக்காட்டாக திராவிடன் கிழமை இதழை நடத்தி நாட்டுக்கும் நமது இலட்சியத்திற்கும் நல்லதோர் பணியாற்றியிருக்கின்ருர்.

கழகம் வெகு விரைவில் வடநாட்டு ஏகாதிபத்திய இரும்புப் பிடியர்களின் அடக்குமுறைக் கொடுமைக்கு ஆளாக இருக்கின்ற இந்த நெருக்கடியான — ஆனல் நாம் வரவேற்கின்ற மிக முக்கியமான சோதனைக் கட்டத்தில் திராவிடன் ஏட்டின் தொண்டு நமது தாயகத்திற்கு பெரிதும் பயன்படும் என்று நம்புகிறேன்.

வியாபார நோக்கமும் செல்வம் சேமிக்கும் நோக்கமும் கொண்டு ஏடுகள் பல பவனி வரும் இந்நாட்களில் என். வி. என். அவர்கள் கொள்கையை முதலாக வைத்து ஆற்றுகின்ற இந்தப் பணியை இந்நாள் திராவிடம் மட்டுமல்ல எந்நாளும் தாயகம் மறவாது !

திராவிடன் வாழ்க!

அன்புள்ள,

**மு. கருணாநிதி**

# "திராவிடன்" வாழ்க!

•

'திராவிடன்' தொடங்கி 15 ஆண்டுகளாகிவிட்டன.

ஓயாத அலைச்சலுக்கிடையில் நமது அமைப்புச் செயலாளர் தோழர் என். வி. என். அவர்கள் தவருமல் 'திராவிட'னைக் கொண்டுவருவது பாராட்டுக்குரியது.

எண்ணற்ற எழுத்தாளர்களை ஊக்குவித்த பெருமை அவரைச்சாரும்.

பம்பாய், ஆமதாபாத் பகுதிகளுக்கு நான் சென்றிருந்த நேரத்தில் 'திராவிடன்' பெருமையை தோழர்கள் சொல்லக் கேட்டு மகிழ்ந்தேன்.

அன்றும், இன்றும், என்றும் அனைவருக்கும் தோழராய் தொண்டர்களை ஊக்கப்படுத்தும் அண்ணலாய் விளங்கும் நண்பர் என். வி. என். அவர்களின் சக்தி வாய்ந்த ஆயுதம் 'திராவிடன்'

'திராவிடன்' பல்லாண்டு வாழ்ந்து திராவிடர் துயர் துடைக்கட்டும்!

அன்பு,

**ஏ. பி. சனர்த்தனம்**

7ம் பக்கத் தொடர்ச்சி……………

டால் வலியும் ஏற்படுவது இயல்பானதே. ஆசிரியரின் நினைவிலே சூடு தட்டியது. நமது ஒருவருக்கே ஆதிக்கபலம் இத்தனை பாடுபடுகிறதே. இன்னும் பலர் இதுபோலக் கிளம்பினால்……நம்பிக்கை கலந்த சிரிப்பொலி கிளம்பியது…

அந்தச் சிரிப்புக்குப்பின்னே எரிமலை மறைந்திருந்ததைப் புரிந்துகொள்ள 'பெரும் புள்ளி'களுக்குக் காலம் அதிகம் செல்லவில்லை. புதுமை ஏட்டாசிரியர் நினைத்தது போலவே ஆதிக்கம் படாதபாடு படத்துவங்கியது.

இத்தகு நிலைக்கு வருவதற்குள் புதுமை இதழாசிரியர்களுக்கு—ஏற்பட்ட தொல்லைகளோ சொல்லி முடியாத அளவிலே இலட்சிய வெற்றி பற்றிய சிந்தனையோடு, ஆதிக்கவாதிகள் தந்த தொல்லைகளை சகித்து உயிரைப் பணயம் வைத்து ஏடு நடத்தினர். புலியோடு போராடுகின்றபோது, புலித்தோலின் பளபளப்பை எண்ணி போராட்டத்தை நிறுத்தி, மயங்கி உயிரைப் பலி கொடுக்கும் அப்பாவிகளென்று தான் புதுமை இதழாசிரியர்களை ஆதிக்கவாதிகள் கருதினர். பயமுறுத்தலோடு பகட்டையும் காட்டினர்.

"இதோ பார் இப்படி ஏடு நடத்த வேண்டும். முகப்பைப் பார்த்தாயா; எத்தனை அழகு வண்ணத்திலே வள்ளி மணாளனை. மயிலேறும் வடிவேலனை நமது ஓவியர் தீட்டித் தந்திருக்கிறார். பார்க்கும் போதே பக்தி சொட்டவில்லையா என்ன? உள்ளே நான் தீட்டிக் காட்டியிருக்கும் தலையங்கத்தைப் பார்த்தாயா?' கையிலிருப்பதென்ன?'என்று கன்னத்திலடிப்பது போலல்லலா எழுதியிருக்கிறேன்.

முருகனின் கையிலிருப்பது என்ன? தங்கத்தாலான வேல்! நேரு மகானின் கையிலிருப்பது என்ன? ஆதினங்கள் தந்த தங்கச் செங்கோல்!……நேரு மகான் ஒரு போதும் ஆத்திகத்துக்கு முட்டுக் கட்டையாக இருக்கமாட்டார். அப்படி ஏதாவது தப்பித் தவறி நினைத்தாலும் அவரது கையிலே பிடித்திருக்கும் தங்கச் செங்கோல், முருகனை நினைப்பூட்டும். அந்த நினைப்பு…ஆத்திகத்தை அழிக்கவா தூண்டும்?…எப்படி எனது கனல் பறக்கும் எழுத்து. இப்படி எழுதினாலல்லவா நாடு போற்றும். இந்த இதழிலே வெளியாகியிருக்கும் குறுநாவலையும், பெருங் கதையையும் பார்த்தாயா? கனவிலேவந்து ஏழுமலையான் கட்டளையிடும் அதிசயத்தையல்லவா எழுத ஏற்பாடு செய்தேன். அதற்காகப் போடப்பட்டிருக்கும் சித்திரங்களைப் பார்த்தாயா? தீர்த்தக் குளத்தைக்கூட விடாமல் நமது சைத்ரீகர் சித்தரித்திருக்கிறார். எத்தனை கவர்ச்சி! பார்ப்போர் படிப்போருக்குத்தான் எவ்வளவு மகிழ்ச்சி!"

…தங்களது இதழ்களைப்பற்றி, வெளியிடும் பாங்கைப்பற்றி இது போலப் புகழ்ந்து புதுமை எழுத்தாளர்களையும், ஆசிரியர்களையும்பகட்டால் கவர நினைத்தனர். துவக்கத்திலே கிளப்பிய எச்சரிக்கை பயனில்லாமல் போகவே, இந்த இனிப்புப் பேச்சு வந்தது. அந்த இனிப்பு இலட்சிய நெஞ்சோடு கலக்கவில்லை. மாருக புதியசிந்தனை புயல் வேசத்திலே மறுமலர்ச்சியை நோக்கி இழுத்துச் சென்றது.

அப்போதுதான் தென்னகப் பத்திரிகை உலகிலே நல்லதொரு திருப்பம் ஏற்பட்டது. அழகு வண்ணங்காட்டி ஆயிரக்கணக்கிலே ஏடுகள் வந்தாலும், சிறப்புமிகு சீர்திருத்தும் ஏடுகள் எவைஎவையோ அவற்றுக்குத்தான் லட்சக்கணக்கிலே வாசகர்கள் கிடைத்தனர், வண்ணமில்லாதிருந்தும். வாழ்க்கைக்கு வழிகாட்டும் குறிப்புகளைப் படிப்பதுபோல விழுந்தடித்துக் கொண்டு பிரதிகள் அதிகம் வெளியாகும் வாய்ப்பு இல்லாத காரணத்தால் ஒரே பத்திரிகையை பலர் படித்து முடித்தனர். இப்போது பகட்டும் அடிபட்டது! 'இந்த வாசகர்களுக்கு இப்படியா புத்தி கெட வேண்டு'மென்று சலித்துக் கொண்டனர் பெரும்புள்ளிகள். அந்தச் சலிப்பின் முடிவு அவர்களது நெஞ்சத்திலே புதிய திட்டம் கருவெடுத்தது.

" அந்த வாசகர்கள் புதுமை என்ற கருத்தை வைத்துக்கொண்டு தானே கண்ணை மூடிக்கொண்டு புதுமை இதழாசிரியர்களைப் பின் தொடருகிறார்கள். அந்தப் புதுமையையும் புரட்சியையும் காரசாரமாகத் தாக்கத் துவங்கினல், உண்மையிருக்குமிடத்திலே பொய்யைத் திணித்தால்…ஆ!.இப்படியா அங்கே நடக்கிறதென்று நம் பக்கமாக ஓடி வந்துவிட மாட்டார்களா!"

ஆசை அவர்களையும்விடவில்லை. நினைத்ததை அவர்கள் நடத்தத் துவங்கினர்.

'அந்த நடிகர் கிழண்டு போய் விட்டார்' கலைத்துறைப்புதுமைக்கு—புரட்சிக்கு ஆக்கமளித்த மக்கள் திலகமாகத் திகழும் நடிகரைப் பற்றி பெரும் புள்ளிகள் இதுபோல எழுதினர், பரிதாபம் குமாரத் தன்மை எதுவோ இருக்குமென்று அவரிடம் நெருங்கிச் சென்று தெரிந்துவந்து ஏமாற்றப்பட்டு 'கிழண்டு போய்விட்டது' என்று நினைத்துவிட்டனர் போலும். இந்த அசட்டுத்தனத்தை நினைத்து நாடு கைகொட்டிச் சிரித்தது. எனவே, பரிதாபப் படுவதைத் தவிர வேறு வழி தெரியவில்லை வாசகர்களுக்கு.

இங்கே குழப்பம்! அங்கே அடிதடி! என்றெல்லாம் தலைப்பிட்டு திடுக்கிடும் செய்தி போட்டுக்கூட, திடுக்கிட்டவர்கள் அந்தப் பெரும் புள்ளிகளே! பாதையிலே கத்திச் செல்லும் கிறுக்கனின் பேச்சுக்கு எவ்வளவு மதிப்பிருந்ததோ அவ்வளவு மதிப்பளித்தனர் நாட்டு மக்கள் அந்த ஏட்டாசிரியருக்கு. மருந்துக் கூடத்தினுள்ளேயிருக்கும் போது வைத்தியனுக்கு பைத்தியம் பிடித்தால் என்ன விளையுமோ அது நடந்தது அந்த ஏட்டாசிரியரின் வாழ்விலே.

இவரைப் போலவே புதுமையை எதிர்த்த இதழாசிரியர்கள் பலர் இப்போது கால வேகத்திற்கேற்ப மாறி வந்திருந்தும் இந்த அசட்டுப் பட்டந்தாங்கிகள் கண்ணை மூடிக்கொண்டு பழைய பாணியிலேயே கதறுகின்றனர்.

புதுமைத்தேடிகள்; இலட்சிய புரி நோக்கிப் போவோர் சகல பகுதிகளிலும் எல்லாத் துறைகளிலும் வெற்றி நடை போடுகின்றனர். நமக்கேன் வீண் வம்பு காலத்துக்கேற்ற முறையிலே கருத்தை மாற்றிக்கொள்வோமென்று மக்கள் சக்திக்கு மதிப்பளிக்கும் முறையிலே பல இதழாசிரியர்கள் இறங்கிவந்த நேரத்திலும், 'விட்டேனு பார்' என்ற தர்பார் ராகத்திலே சில பெரும் புள்ளிகள் நடந்து வருவது அவர்களுக்கு மட்டுமல்ல நாட்டுக்கும் பெருந்தீங்காகும்.

எந்தக் கருத்தை மறைக்க நினைக்கிறார்களோ அது மக்கள் மன்றத்திலேசிறப்பிடத்தை பெற்றுவிட்ட காலம். தனிப்பட்ட குரோத புத்தி கொண்டு யாரை வேண்டாதவரென்று கருதிக்கொண்டு ஓட்டிவிட எண்ணுகிறார்களோ, அவர்கள் மக்களின் நெஞ்சத்திலே இடம் பிடித்தவர்களாகிவிட்டார்கள். எவரெவரால் நடத்தப்படும் ஏடுகள் நாட்டுக்குத் தீதானவை என்று 'பெரும் புள்ளிகளால்' அறிமுகப்படுத்தப்பட்டதோ அவைகளெல்லாம் 'பிரதிகளுக்கு வாசகர்கள் தேடி ஓடும் அளவிலே' விற்பனையாகும் நேரம்.

இன்று போய் அன்று போல 'பிரச்சாரம்' நடத்தி ஒழித்துக்கட்டி விடலாம், புதுமை எண்ணங்களை மக்களின் இதயத்திலிருந்தே ஓட்டி விடலாமென்று நினைப்பது தவறிலும் பெருந் தவறு. ஏனெனில் எதிர்நீச்சலிடுவோர் எழுச்சிக் காளைகளும், அவர்தம் முன்னேற்றத்துக்குப் பாடுபடும் ஏட்டாசிரியர்களும். அவர்களிடம் பச்சோந்திகளின் வேடம் பலிக்காது. எத்தனை பெரிய எதிர்ப்பையும் துச்சமாக மதித்து நடந்துவந்து கொண்டிருக்கும் இலட்சியக் குன்றுகளை பரிதாபத்திற்குரிய செத்துக்கொண்டிருக்கும் இதழாசிரியர்களால் தடுத்து நிறுத்திவிட முடியாது.

கடல் அலையை நிறுத்த முயன்றுளும் ஒரு மட மன்னன். அவன் கதை போலத்தானிருக்கும் இவர்களது இழிச்செயலும்! வாழத்துடிப்பவர்களின் முன்னே வாள் சுழற்ற வேண்டாம். துரோகிகள் வரிசையிலே, காட்டிக் கொடுப்பவர்கள் பட்டியலிலே இடம் பிடிக்கவா 'பெரும் புள்ளிகளின் திறமை பயன்படவேண்டும். படமெடுத்து நிற்கும் பாம்பை தடியெடுத்து ஓடித் தாக்காவிட்டால் போகிறது. அடித்துக் கொண்டிருப்பவர்களைத் தடுக்காமலிருந்தால் போதுமே!

இன்று பயங்கர சக்திகளை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கிறது மக்கள் மன்றம். அந்த மக்களுக்கு பெருங்குடி வழியினருக்கு வழிகாட்ட புதுமை ஏடுகள் துணை நிற்கின்றன. அவர்களின் பணி சிறப்படைய முயற்சியெடுக்காவிட்டாலும், இதயத்திலே சிரித்தாவது நிற்கவேண்டும். இதுதான் நல்லவர் எண்ணும் எண்ணமாகயிருக்க முடியும்.

இந்த நல்வழி மறந்து ஆகாத போக்கிலே ஈடுபாடு கொள்வோர் அல்லலையே அறுவடை செய்ய முடியும். இல்லையேல் மக்கள் சக்தியின் முன்னே மண்டியிட்ட மதோன்மத்தர்களின் கதையை நினைத்துப் பாருங்களென்றுதான் வேதனையோடு கூற முடிகிறது.

'போ! போ!!' என்று விரட்டிய பெரும் புள்ளிகளைத் தூக்குமேடை 'வா! வா!'வென்று வரவேற்ற நிகழ்ச்சிகள் இரத்தத் துளிகள் பட்ட சரித்திரத்திலே ஏராளம், ஏராளம்!

○

---

முகவரி

**வீரை மு. சோமசுந்தரம்**

(தி. மு. க. துணைச்செயலாளர்
தாராவி—பம்பாய்.)

இலவடித் தெரு, வீரவநல்லூர் அஞ்சல்

நெல்லை மாவட்டம்.

# இன்பத் திராவிடமே எமது இலட்சியம்!

[நாவலர். நெடுஞ்செழியன்]



*

"உலகில் இன்று சின்னஞ் சிறு நாடுகள் எல்லாம் விடுதலை கோரி எழுந்து நிற்பதை நாம் காண் கிருேம்.

வாழ்வில் சகல நலன்களும் தாங்கள் பெற்று வாழ, தங்கள் நாடு விடுதலை பெறவேண்டும் என்று பல நாடுகள் கிளர்ந்தெழுந்தன, வெற்றியும் பெற்றன. இன்னும் சில நாடுகள் அப்போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றன.

ஒரு நாட்டு மக்களுக்கு வயிருர உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம், வாழ வழி, ஓய்வு, உல்லாச வசதி முதலியன அடிப்படைத் தேவைகளாகும்; இந்த அடிப்படைத் தேவைகளைச் சேகரித்துத் தர ஒரு ஆட்சி அமைப்பு —நல்லாட்சி — சுதந்திர ஆட்சி இன்றியமையாததாகும்.

சின்னஞ்சிறு நாடுகளெல்லாம் உலகெங்கும் உள்ள எண்ணற்ற நாடுகள், இந்த நல்லாட்சி—சுதந்திரத் தனியரசு அமைவதில்தான் தங்களின் நல்வாழ்வு அடங்கிக் கிடக்கிறது என்பதை உணர்ந்திருக்கின்றன— ஒப்பியிருக்கின்றன,

விடுதலை கோருவது, தங்கள் தாயகம் நல்வாழ்வு பெற—மானத்தோடு கூடிய நல்வாழ்வு பெற தங்களுக்கெனத் தனி ஆட்சி—சுதந்திர ஆட்சி—எல்லைக்கோடு, அமைத்துக் கொள்ளத்தான்.

தென்னுட்டை - திராவிடத்தைப் பொறுத்தவரையில், 'இந்திய யூனியன்' என்ற ஆட்சி அமைப்பின் கீழ், தென்னுடு மக்களுக்கு அவர்களின் வாழ்க்கைக்கான அடிப்படைகள் அத்தனையும் தங்கு தடையின்றித் தரப்படுகின்றனவா என்ருல், இல்லை! இனியாவது தரப்படுமா என்ருல், ஐயப்பாடேயாகும்!

ஆகவேதான் தென்னுட்டிற்கென ஒரு எல்லைக்கோடு, ஆட்சி அமைப்பு வேண்டும். இந்த நாட்டு வளம், உழைப்பு செல்வம்பொருள், ஆற்றல், அறிவு, வருமானம் அத்தனையும் இந்த நாட்டு மக்களுக்கே பயன்படுவற்தாக!

24 ஆயிரம் மைல் சுற்றளவு கொண்ட உலகம் முழுவதும் ஒன்ருக இருந்து, அதில் வாழும் சுமார் 250 கோடி மக்களும் ஒரே ஆட்சியின் கீழ் வாழ்வது போலவும், நாம் மட்டும் திராவிட நாட்டை அந்த உலகத்திலிருந்து பிய்த்தெடுத்து திராவிட மக்களைத் நனியாக வாழச்செய்ய முயற்சிப்பதைப் போலவும் எண்ணிக் கொண்டு சிலர் திராவிடநாடு கோரிக்கை பிளவு மனப்பான்மை கொண்டது என்று வாதாடுகிருர்கள்.

உலகம் இன்று ஒரே உலகமாக இருக்கவில்லை; உலக மக்கள் ஒரே ஆட்சியின் கீழ் வாழவில்லை.

குறிப்பிட்டுக் கூறக் கூடியனவாக, சுமார் 99 அல்லது 100 நாடுகளாகத்தான் உலகம் பிரிந்திருக்கிறது. அந்தந்த நாட்டவர், தங்கள் தங்களின் வாழ்வுப் பாதுகாப்பிற்காகத் தனித்தனி எல்லைக் கோடுகளுக்குள் சுதந்திர நல்லாட்சிகளை நிறுவிக்கொண்டுதான் இருக்கின்றனர்.

தாங்கள் தனித்து வாழ்வதில் தான்—வாழ்ந்தால்தான் தங்கள் மக்களுக்கான வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்திச் செய்து தரமுடியும். தங்கள் மக்கள் சுதந்திர மக்களாக வாழமுடியும் என்று கருதுகிருர்கள் அந்த அடிப்படையில் சின்னஞ் சிறு நாடுகள் எல்லாம் தங்கள் உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்ளத் துடித்து நிற்கின்றன. உண்மை இப்படி இருக்க திராவிட மக்களுக்கு விடுதலை வேண்டுமென்பது எந்த வகையாலே தவறுடையதாகும்.

உலகம் என்று ஒன்றுபடுகிறதோ —நாடுகள் என்ற எல்லைக்கோட்டையும் அந்த நாடுகளுக்கான சுதந்திர ஆட்சியையும் அழித்துவிட்டு இனி 'ஒரே உலகம்—ஒரே ஆட்சி' என்ற நிலைக்கு வருகிறதோ அன்று, நாமும் திராவிட நாடு என்ற எல்லையை அழித்து விடுவோம்"

நாம் வளருகிருேம் — வளர்ந்திருக்கிருேம்—நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே இருக்கிருேம்! அடக்குமுறைகள் நம்மீது கட்டவிழ்த்து விடப்பட்டாலும் வளருகிருேம்! நம் மீது மாற்ருர் வசை மாரிப் பொழியப் பொழிய நாம் வளருகிருேம்! ஏசவும், இழிச்சொல் வீசவும் செய்கின்றனர். மாற்ருர் என்ருலும், நாம் வளருகிருேம்!

அடிக்கப்படும் பந்து, மேலும் மேலும் மேலும் உந்துவதைப் போல, மிதிக்கப்படும் புழுவும் துள்ளுவதைப் போல, தாக்கப்படும் பூனையும் புலியாகச் சீறுவதைப் போல, நாம் அடக்குமுறைகள்— இழிச்சொற்கள் — பழிகள் — ஏசல்கள் எல்லாம் வீசப்பட்டாலும் வளருகிருேம்.

நமது கருத்துக்கள், கொள்கைகள், இலட்சியம் ஏருத உள்ளங்களில் எல்லாம் ஏறிஞல், புகாத செவிகளில் எல்லாம் புகுந்தால், நுழையாத நெஞ்சங்களில் எல்லாம் நுழைந்தால், தடவாத இதய நாடிகளை எல்லாம் தடவிஞல், அவை வெற்றி பெருமல் போய் விடாது என்ற உறுதிப்பாடு நமக்கு நிரம்ப உண்டு. அதனுல்தான், அறிவுப் படையையும் ஆற்றல் படையையும் திரட்டுகிற பெரும் பணியில் நாம் ஈடுபட்டிருக்கிருேம்.

தாயகத்தை விடுவிப்பது என்ற பொறுப்பு எத்தனை பெரியது என்பதை நாம் நன்கு அறிவோம். நமது வழிப் பயணம்—தொலைவு என்பதையும் நாம் உணர்வோம்.

என்ருலும் அறிஞர் அண்ணு அவர்களின் சீரிய தலைமையில் தொடர்ந்து நமது பயணத்தை மேற்கொள்வோம். அதிகாரபலம் மிக்க நேருவின் ஆட்சி நம்மை எவ்வளவு அச்சுறுத்திஞலும், மிரட்டிஞலும், அடக்குமுறைகளை வீசிஞலும், நமது பயணத்தைச் சீர்குலைக்கத் தடைகள் பல விதித்தாலும், நமது உரிமையை—சுதந்திரத் திராவிடத்தைக் காணும் நமது பயணத்தைத் தடுக்கமுடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவ்வித பயணத்தில் 14 ஆண்டுகளைக் கடந்து 15-ம் ஆண்டு பயணத்தைத் துவங்கும் "திராவிடன்" சீரிய பணி வெல்க வெல்க வெல்க என்று கூறி மனமார வாழ்த்துகிறேன்.

●





## வாணி தமிழ் இங்கிலீஷ் போதினி

தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புத்தகத்தின் மூலம் பிறர் ஒத்தாசை யில்லாமல், இங்கிலீஷ் சுலபமாகப் படிக்கவும் பேசவும், கடிதங்கள் எழுதவும் கற்றுக்கொள்ளலாம். 704 பக்கங்கள் கொண்ட பெரிய பைண்டு புத்தகம், விலை ரூ. 5—00. வி. பி. செலவு ரூ. 1—25.

## தையற்கலை

இதன் மூலம் யார் வேண்டுமானுலும் பிறர் உதவியில்லாமல். தானே தையல் வேலையைச் சுலபமாகக் கற்றுக்கொள்ளலாம். மேலும் இதில் துணிகள் அளவு வெட்டி தைப்பதற்கான தனித்தனி படங்களும் விளக்கமான முறையில் இருக்கின்றன.

விலை : ரூ. 3—00 தபால் செலவு ரூ. 1—00

## ஐசுவரியம் (குடிசைக் கைத்தொழில்)

இதில் சோப், இங்கி, ஊதுபத்தி, வாசனைத் தைலம், மெழுகு வர்த்தி, ஸ்னே, பேஸ் பௌடர், சாம்பிராணி, பெனுயில் போன்ற 200 கைத்தொழில் கொண்டது. விலை: ரூ. 4—00, வி. பி. செலவு 85 காசு.

## குடும்ப இலகு வைத்தியம்

வீட்டுச் சரக்குகளைக் கொண்டு நோய்களைப் போக்கிக் கொள்ளும் ஏராளமான வைத்திய முறைகளடங்கியது தபால் செலவுடன் ரூ. 3—50.

VANI BOOK DEPOT,

3, மலையபெருமாள் தெரு. Post Box No. 239, Madras-1.

# அஞ்சா நெஞ்சன் அளித்திடும் பதில்கள்

எம். சிதம்பரம், மதுரை

கே: உலக நாடுகள் சபைக்கு முதன் முதலாக இந்தியப் பிரதிநிதிகளின் தலைவராகச் சென்றது யார்?

ப: டாக்டர் ஏ. இராமசாமி அவர்கள்.

ஃ

சி. ராகவன், மயிலை

கே: ஐதராபாத் பிரச்சினையை ஐ. நா. சபையில் வெற்றியடையச் செய்த இந்தியப் பிரதிநிதிக் குழுவினர், காஷ்மீர் விவகாரத்தில் மங்கிவிட்டதேன்?

ப: உலக நாடுகள் சபையில் காஷ்மீர் விவகாரத்தின்மீது வாதாடுவதற்கு இந்திய அரசினரால் அனுப்பப்பட்டவர் சர். கோபாலசாமி அய்யங்கார். அவர் நுண்ணிய அரசியல் அடிப்படையில் அப்பிரச்சினையை அணுகாததால் அன்று பாகிஸ்தான் சார்பில் கூறப்பட்ட நிபந்தனைக்கு தலையசைத்துவிட்டதாக பல தலைவர்கள் முணுமுணுத்தனர்.

பாகிஸ்தான் சார்பில் வாதிட்டவர் சர். ஜபருல்லாகான்.

அதற்குப் பிறகு மீண்டும் காஷ்மீர் விவகாரம்மீது வாதிட ஐ. நா. சபைக்குச் செல்லுமாறு டாக்டர் எ. இராமசாமி அவர்களை இந்திய அரசினர் வேண்டிக் கொண்டதாகவும், ஆனால் முதலில் வாதிட்டவர் செய்த தவறின் காரணமாக அந்தப் பிரச்சினையைத் தாம் அணுகுவது சரியில்லையென்று மறுத்துவிட்டதாகவும் தெரியவருகிறது.

எனவே, காலஞ்சென்ற சர். பி. என். ராவ் அவர்கள் இந்தியா சார்பில் ஐ. நா. மன்றம் சென்று தம்மாலியன்றவரை வாதிட்டார். என்றாலும் முதற்கோணல் முற்றும் கோணல் என்பதுபோல காஷ்மீர் பிரச்சினை இன்றுவரை ஊசலாடிக் கொண்டு வருகிறது.

ஃ

வி. ராமநாதன், வேலூர்

கே: தேர்தல் கூட்டு, உடன்பாடு என்றெல்லாம், தி. மு. கழகத்தைச் சம்பந்தப்படுத்திப் பலவிதமாக பேசப்படுகிறதே, அதுபற்றி தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: கழகம் அதிகார பூர்வமாக வெளியிடும் கருத்தே இறுதியானது. மதுரை மாநாட்டில் அண்ணா அவர்கள் தலைமை உரையில் தெரிவித்துள்ள கருத்தையும் தாங்கள் கூர்ந்து கவனித்தால் விவரம் அறிவீர்கள்.

ஃ

ஆர். ஆர். ரகுநாதன், சேலம்

கே: தி. மு. கழகம் எத்தனை இடங்களில் போட்டியிடும்?

ப: ஆட்சிமன்றக் குழுவின் விசாரணையின் விவரத்தை பொதுச்செயலாளர் பரிசீலனை செய்து, பின்னர் எத்தனை இடங்களில் போட்டியிடுவது என்பதைப்பற்றி அறிவிப்பார்.

ஃ

என். தங்கவேலு, செங்கற்பட்டு

கே: அடுத்த பொதுத் தேர்தலுக்குப் பிறகு தி. மு. கழகம் அழிந்துவிடும் என்று காமராசர் டெல்லியில் பேசியிருக்கிறாரே, இதற்கு சூடச்சூட பதில் தர முடியுமா?

ப: திராவிடத் தனிஅரசு கேட்பவர்களின் நாக்கைத் துண்டித்துவிடுவேன், நாட்டுப் பிரிவினைபற்றி எழுதுபவர்களின் கட்டைவிரலை வெட்டிவிடுவேன் என்றெல்லாம் இதே காமராசர் முன்பு கொக்கரித்தார். நாடெங்கும் திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடுகளையும் நடத்தினார். கடைசியாக மூக்கறுபட்டார்.

திராவிட நாடு திராவிடருக்கே என்ற மகத்தான கொள்கைக்கு மேலும் ஆதரவு வளர்ந்தது. காமராசரின் ஆணவத்தனமான பேச்சு பிசுபிசுத்தது. ஆனால் இன்று டெல்லி எசமானர்களின் பக்கத்தில் நின்று கொண்டு, தி. மு. கழகம் அழிந்துவிடும் என்று காமராசர் கூப்பாடு போடுவதின் இரகசியம், டெல்லி ஏகாதிபத்தியம் வீசும் பதவி என்னும் எலும்புத் துண்டுகள் இன்னும் அதிகமாகத் தங்களுக்கு வேண்டும் என்று காமராசர்கள் மறைமுகமாகச் சொல்வதேயாகும்.

காமராசர் போன்றவர்களும் டெல்லி ஏகாதிபத்தியமும் எவ்வளவு அடக்குமுறைகளை வீசினாலும் இயக்கத்தையே தடைப்படுத்துவதாக உறுமினாலும், தி. மு. கழகத்தைச் சிறிதும் அசைக்கமுடியாது. அதுபோலவே திராவிட மக்களின் பிறப்புரிமையாகிய திராவிடச் சமதர்மக் கூட்டாட்சி அமைவதை தடுக்கவும் முடியாது.

ஃ

வி. ஆர். மாதவன்,
திருவொற்றியூர்.

கே: நடிகர்களுக்கு அரசியல் தேவையா இல்லையா?

ப: நடிகர்களுக்கு அரசியல் அறவே கூடாது என்று பசப்பிவந்த நடிகர்கள் கூட இன்று மறைமுகமாக அரசியல் கட்சிகளுடன் தொடர்புகொள்ள முற்பட்டுள்ளனரே, அதைவிட வெளிப்படையாக தங்களுக்குச் சரியென்றுபட்ட கொள்கை வழிநின்று அரசியலில் ஈடுபடும் நடிகர்களே நேர்மையாளர்கள் என்பது எனது எண்ணம்.

ஃ

ப. அறிவழகன், பழனி

கே: வகுப்பு வெறியை வளர்க்கும் கட்சி எது?

ப: காங்கிரஸ்.

ஃ

வி. எம். அரங்கநாதன்,
மேற்குசென்னை

கே: தி. மு. கழகத்திற்கு தடை விதிக்கப்பட்டால் என்ன செய்வீர்கள்?

ப: தடையை தகர்த்தெறிவோம்.

ஃ

டி. கே. ஜி. கிருஷ்ணன், தஞ்சை

கே: கழகத்தில் உட்பூசல் வளர்ந்து வருவதாக காங்கிரஸ்காரர்கள் கேலி பேசுகிறார்களே?

ப: காங்கிரசில் ஒருவருக்கொருவர் உள்ளூர குழி பறித்துக் கொள்ளும் இழிச்செயல்களை நாடு அறியாததல்ல. கழகத்தில் அவ்வித துரோகப்படலம் ஒன்றுமில்லை. ஏதோ அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெறும் மிகச் சாதாரணச் சம்பவங்களை மிகைப்படுத்தியும் உண்மைக்கு மாறாக செய்திகளை வெளியிட்டும், கழகத்தில் பெரிய பிளவு என்று ஆளுங்கட்சியினரும் அவர்களது எடுபிடி ஆட்களும் அவர்களைச் சார்ந்த பத்திரிகைக்காரர்களும் கூப்பாடுபோடுகின்றனர். விரைவில் அவர்களது கோயபல்ஸ் பிரச்சாரத்தின் அவலட்சணத்தைக் கண்டு ஊர் சிரிக்கத்தான் போகிறது.

●

## அன்றும் இன்றும்!



படியரிசி நான்கணுவாய் விற்றகாலம் போச்சு—இப்போ
பட்டினியாய் மக்களெலாம் சுற்றும்காலமாச்சு—கேடு
பற்றும்கால மாச்சு

வளமிகுந்த நாட்களென்று மகிழ்ந்தகாலம் போச்சு—நமை
வாட்டிடும்ஓர் செல்வனிடம் மிகுந்துசெல்ல லாச்சு— அவன்
அகந்லத கொள்ள லாச்சு

வடவர்களின் தலையில் கல்லை வைத்தகாலம் போச்சு—இப்போ
வடவர்நமை வதைவதைத்து நைத்துக் கொல்லலாச்சு—நாடு
பைத்தியமாய்ப் போச்சு

இமயத்தில் தமிழ்க்கொடியை நட்டகாலம் போச்சு—இப்போ
அவன்கொடியை நம்தலையி லிட்ட காலமாச்சு—கேடு
கெட்ட காலமாச்சு

கங்கையினை நம்மவர்கள் கொண்டகாலம் போச்சு—இப்போ
கங்கையினர் நம்பொருளை உண்டுவர லாச்சு—செல்வம்
கொண்டுசெல்ல லாச்சு

எதிரியிலை யென்று அன்று வீரம்பேசலாச்சு—இன்று
ஏனடங்கி மானத்தைப் பேரம்பேசலாச்சு?—செல்வம்
சூரையாட லாச்சு?

தமிழ்வளர்க்கத் தலைகொடுப்போம் என்று சொன்னபேச்சு—இந்தி
தமிழ்நாட்டில் ஆட்சிசெயும் இன்று என்ன ஆச்சு? —அதன் வன்மை எங்கு போச்சு?

இந்நிலைமைக் காக்கியது காங்கிரசார் ஆட்சி—இனி
எழுந்திடுவீர் தோழர்களே! வீழ்ந்துவிடும் சூழ்ச்சி—வரும் தென்னவரின் மாட்சி

- மதிமாறன்

# பாவ மன்னிப்பு

○

பாமர மக்கள் கண்விழித்துக் கொண்டால், பிறகு அவர்களை ஏமாற்ற முடியாது என்பதைப் பற்றி ஒரு கதை உண்டு.

ஜெர்மனியிலே மார்ட்டின் லூதர் என்று ஒரு பெரியார் தோன்றினர். கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த பூசாரிகளுடையவும் சாமியார்களுடையவும் அக்கிரமங்களை இவர் கண்டித்து, மதத்தைச் சீர்திருத்தம் செய்ய ஆர்வத்தோடு வேலை செய்துவந்தார். இவர் பக்கம் நாளுக்கு நாள் ஏராளமான மக்களும் சேர்ந்தார்கள். சாமியார்கள் கிராமங்களுக்குப் போய், பிரசங்கம் செய்வது வழக்கம். பிரசங்கம் செய்து முடித்த பிற்பாடு இந்த சாமியார்கள், ''பாவ மன்னிப்புச் சீட்டு'' என்று சீட்டுகளை ஜனங்களுக்கு விற்பனை செய்வது வழக்கம்.

இந்தப் பாவ மன்னிப்புச் சீட்டின் அர்த்தம் என்னவென்ருல், இந்த சீட்டுக்கு விலை கொடுத்து ஒருவன் வாங்கினுல் அவன் செய்த பாவங்கள் எல்லாம் போய்விடும். எத்தனையோ வருஷங்களாக கிறிஸ்தவ சாமியார்கள் இந்த விதமாக மக்களை ஏமாற்றிக்கொண்டு வந்தார்கள்.

ஒத நாள் மார்ட்டின் லூதர் பிறந்த கிராமத்தில், சில சாமியார்கள் வழக்கம்போல் ஒரு கூட்டத்தில் பாவமன்னிப்புச் சீட்டுகளை விற்பனை செய்துகொண்டிருந்தார்கள்.

அப்பொழுது கூட்டத்கிலிருந்த ஒருவன் எழுந்திருந்து, ''ஐயா, ஒரு கேள்வி. முன் செய்த பாபங்களைப் பரிகாரம் செய்வதற்கு நீங்கள் இப்பொழுது மன்னிப்புச் சீட்டு விற்பனை செய்கிறீர்கள். ஆனல் இனி மேல் ஒருவன் செய்யப்போகும் பாபங்களை நிவர்த்தி செய்ய, 'அட்வான்சாக' பணம் கொடுத்து மன்னிப்புச் சீட்டு வாங்க முடியுமா?'' என்று கேட்டான்.

அதற்குச் சாமியார் சொன்னர்: ''நீ கேட்கிற பிரகாரம் இனிமேல் செய்யப் போகும் பாபத்திற்குக் கூட மன்னிப்புச் சீட்டு உண்டு. ஆனல் அதற்கு விலை அதிகம். என்ருர்.

முதலில் கேள்வி கேட்ட மனிதன், ''விலையைப் பற்றி எனக்குக் கவலையில்லை. எனக்கும் என்னைச் சேர்ந்த 10 பேர்களுக்கும் அட்வான்ஸ் மன்னிப்புச் சீட்டுக் கொடுங்கள்'' என்று சொல்லிப் பணத்தைக் கொடுத்து சாமியாரிடம் சீட்டுகளை வாங்கிக்கொண்டான். கூட்டம் முடிவடைந்தது. சாமியார்களின் பைகளும் ரொம்பி விட்டன.

இதற்குள் இரவு மணி 10-க்கு மேல் ஆகிவிட்டது. இரண்டு சாமியார்களும் பணமூட்டைகளை எடுத்துக்கொண்டு அடுத்த கிராமத்திற்குப் புறப்பட்டார்கள். பாதையிலோ ஜனசஞ்சாரம் இல்லை. கொஞ்சம் தூரம் போனவுடனே 10 பேர்கள் வந்து சாமியார்களைச் சூழ்ந்துகொண்டு, ''பணப்பையைக் கொடு'' என்று மிரட்டினர்கள்.

சாமியார்கள், ''அட பாபிகளே, நாங்கள் கோவில்களைச் சேர்ந்த சாமியார்கள், எங்களிடத்தில் உள்ள பணத்தை நீங்கள் அபகரித்தால் கொடிய பாபம் நேரிடும்'' என்ருர்கள். கூட்டத்தில் ஒருவன் சொன்னன்: ''அதைப் பற்றிக் கவலையில்லை, சுவாமி — இரண்டு மணி நேரத்திற்கு முன்புதான் அட்வான்சாகப் பணம் கொடுத்து, இப்பொழுது உங்களிடத்தில் திருடும் பாபத்திற்கு மன்னிப்பு வாங்கிக் கொண்டோம். தயவுசெய்து பணமூட்டையை வையுங்கள்'' என்ருன். சாமியார்கள் இருவரும் பணமூட்டையை இவர்களிடத்தில் கொடுத்துவிட்டு அவர்களுடைய பெரிய சாமியாகிய ''போப்'' இடம் போய் நடந்த விஷயங்களைச் சொன்னர்கள்.

அப்பொழுது அந்தப் பெரிய சாமியார் சொன்னர்: ''ஜனங்கள் விழித்துக்கொண்டார்கள். இனிமேல் நம்முடைய ஏமாற்றுதல் செல்லாது'' என்று.

*

சுதந்திரத் திராவிட சமதர்மக் குடியரசைக் காண்பதே நமது கொள்கை என்று கூறி வந்தவர்களே, இனி தமிழ் தேசியம்தான் நமது கொள்கை என்று சொல்லுங்கள்; கடந்த பல ஆண்டுகளாக கூறிவந்த கொள்கையைப் பற்றிக் கேட்டால், இதுவரை நாங்கள் செய்த தவறுக்கு-பாவத்திற்கு மன்னிப்புக் கேட்டுக் கொள்கிருேம் என்று சொல்லுங்கள்; என்பதாக புதிய கட்சியின் கர்த்தாக்கள் பாவ மன்னிப்புப் படலத்தில் இறங்கியிருப்பது அனைவரும் அறிந்ததே!

புதிய கட்சியின் கர்த்தாக்களிடம் அவர்களது பின்னேடிகள் இப்பொழுதே மேலும் சில பாவ மன்னிப்புச் சீட்டுகளை வாங்கி வைத்திருக்கிருர்களாம்!

ஏன் தெரியுமா? எதிர்காலத்தில் இக்கர்த்தாக்களிடமிருந்து— அவர்களின் குழப்பமிக்க கொள்கையிலிருந்து விடுபட்டு வெளியேறும் போது, அந்தோ இது பாவமல்லவா—தமிழ் தேசிய கொள்கையிலிருந்து தவறலாமா என்று அதன் கர்த்தாக்கள் கேட்கும்போது,

இந்த பாவத்திற்கு அப்போதே உங்களிடம் அட்வான்சாக வாங்கிய பாவமன்னிப்புச் சீட்டுகள் இதோ என்று தூக்கி எறிந்துவிட்டு வெளியேறுவதற்காக!

∴

# சர்க்காரும்-

அகில இந்திய தேசியம்: நம்ம ஊரிலே ஒரு தொழிற்சாலை வருது! அமெரிக்க அரசாங்கம் அதற்கு கடன் கொடுத்து உதவுருங்க.

பெரியவர்: ஆமப்பா! நம்ம ஊருக்கு ரோடுகூட வசதியில்லையே! தொழிற்சாலை எப்படி வரும்?

அ. இ. தே: ரோடு வசதியும் ஏற்பட்டுவிடும்!

பெரி: ஏம்பா! தேர்தல் பிரச்சாரமா? இப்பவே அது வருது, இது வருதுன்னு சொல்லி மக்களை ஏமாத்தறீங்களே!

அ. இ. தே: இல்லை ஐயா! அதாவது நம்ம நாட்டின் பெருஞ்சாலைகளின் அபிவிருத்திக்காக அனைத்துலக அபிவிருத்தி நிறுவனம் 20 கோடி ரூபாய் கடன் கொடுத்திருக்கிறது.

பெரி: அது சரியப்பா! இருக்கிற சாலைகளை அபிவிருத்தி செய்யத் தானே கடன் கொடுக்குது; நீ

1960 டிசம்பர் திங்கள்வரை இந்தியப் பேரரசு அமெரிக்கா, ரஷியா, பிரிட்டன், கனடா, மேற்கு ஜெர்மனி, ஜப்பான், செக்கோஸ்லாவேகியா, ருமேனியா, போலந்து மற்றும் பல நாடுகளிலிருந்து வாங்கியிருக்கும் கடன் 2091.57 கோடி. அதன்பின் இவ்வாண்டு எட்டு மாத காலத்தில் பல சிறிய நாடுகளிலிருந்தெல்லாம் கடன் வாங்கியிருக்கிருர்கள்; ஏறக்குறைய மொத்தம் நான்கு ஆயிரம் கோடிக்கு மேல் கடன் வாங்கிவிட்டார்கள். வாங்கிய கடனுக்கு வட்டியாக மட்டும் பல கோடி ரூபாய் ஆண்டொன்றுக்கு கொடுக்கிருர்கள்; இந்தியப் பேரரசு கடன் கேட்காத நாடு ஏதாவது உலகில் இருக்குமாளுல், அது விடுதலையடையாத நாடுகளாகத்தான் இருக்கும்! அந்த அளவு உலகின் மூலை முடுக்கு நாடுகளிடமெல்லாம் கடன் வாங்கி விட்டார்கள்! எல்லா நாடுகளையும் விட அதிகமாக கடன் கொடுத்த நாடு அமெரிக்காதான்! எனவே

# சர்க்கரையும்!

[தூத்துக்குடி தி. பொன்னுசாமி]

மொட்டைத்தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சுப்போடுறியே!

அ. இ. தே: நம்ம மந்திரி சொல்லி இருக்காருங்க, எல்லாம் வந்து விடும்ங்க!

பெரி: ஆமப்பா! தொழிற்சாலைக்கு கடன் வாங்குருங்க! ரோடுபோட கடன் வாங்குருங்க! இப்படி எல்லாத்துக்கும் கடன் வாங்கினு எப்படியப்பா கடனையடைப்பது?

அ. இ. தே: இங்கே உற்பத்தியாகிற பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அதன் மூலம் கடனைத் திருப்புவார்கள்.

பெரி: அப்படி என்ன தம்பி, நம்ம ஏற்றுமதி செய்து கடனை திருப்பமுடியும்?

அ. இ. தே: இப்போ 'சீனி'தான் அதிகப்படியா உற்பத்தியாகி வெளிநடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. இதைப் போல மற்ற பொருள்களையும் ஏற்றுமதி செய்வார்கள்.

பெரி: உள்நாட்டிலே சீனி தட்டுப்பாடு — வெளி நாட்டுக்கு ஏற்றுமதி; நல்லா இருக்குது உங்க ஆட்சி!

இந்திய துணைக் கண்டத்தை ஆளுகிற காங்கிரஸ் அரசாங்கம் வெளிநாடுகளில் வாங்கியுள்ள பல ஆயிரம் கோடி ரூபாய் கடன்களை எப்படி அடைப்பார்கள் என்று பொதுமக்கள் கேட்டால், அதற்கு மேற்குறித்த உரையாடலில் உள்ளபடி உற்பத்தியைபெருக்குவோம்— உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வோம் — கடனை அடைப்போம் என்று காங்கிரஸ்காரர்கள் பதில் அளிக்க முன் வருகிருர்கள்.

அமெரிக்காவிடம் வாங்கிய கடனை அடைப்பதற்கு இந்தியப் பேரரசு அமெரிக்க அரசோடு சில பல ஒப்பந்தங்களை செய்துகொண்டது. அதன்படி இவ்வாண்டு டிசம்பர் மாதத்திற்குள் அமெரிக்காவிற்கு ஒரு லட்சத்து எண்பத்தேழு ஆயிரம் டன் சர்க்கரை ஏற்றுமதியாக இருக்கிறது; இதர நாடுகளுக்கு 30 ஆயிரம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. வெளிநாட்டில் வாங்கிய கடனையடைப்பதற்காகஇந்தஆட்சி ஏற்றுமதியாக இருக்கும் மேற்குறித்த இரண்டு லட்சத்துப் பதினேழு ஆயிரம் டன் சர்க்கரையின் மூலம் இந்திய அரசுக்கு ஐந்தரை கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. மேலும் வெளிநாட்டு ஏற்றுமதிக்காக ஒதுக்கியுள்ள ஐந்து இலட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதியானல் இந்திய அரசுக்கு ரூ. 16 கோடிவரை நட்டம் ஏற்படுமென்று மதிப்பிடப்படுகிறது.

இந்தியாவில் சர்க்கரை உற்பத்திச் செலவு கூடுதலாக இருக்கிறதென்றும், எனவே அமெரிக்காவிற்கு ஏற்றுமதிசெய்தால் மணங்கு 1க்கு ரூ. 8 நட்டமும், வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால் மணங்கு 1க்கு ரூ. 13லிருந்து 14 வரை நட்டமும்ஏற்படுகிறது.கடனை அடைப்பதற்கு இப்படி நட்டத்திற்கா வியாபாரம் நடத்துவது! ஏழை நாட்டின்—எளிய மக்களின் வரிப்பணம் இப்படியா பாழடிக்கப் படவேண்டும்!

வியாபாரிகளில் சிலபேர் உண்டு மொத்த வியாபாரியிடம் சில்லரை வியாபாரி கடனுக்கு சரக்கு வாங்கு

(14-ம் பக்கம் பார்க்க)

# 14 ஆண்டுகள் !

ஆகஸ்டு 15-ந்தேதியோடு பதினன்கு ஆண்டுகள் முடிந்துவிட்டன! 'இந்திய' நாட்டைவிட்டு வெள்ளைக்காரன் வெளியேறி இன்றுடன் 14 ஆண்டுகள் ஆகிவிட்டன. காங்கிரஸ்காரர்கள் வெள்ளையனை விரட்டியடித்து(!) இன்றுடன் பதினன்கு வருடங்கள்! ஆம்! 'எங்களால்தான் ஆளமுடியும், நாங்கள் தான் அரசாட்சி செய்வோம்' என்று ஆணவத்துடன் 'காங்கிரஸ்' அரியணை ஏறி பதினன்கு வருடங்களாகின்றன!

அடேயப்பா! நினைத்தால் எவ்வளவு ஆச்சரியம் உண்டாகிறது! ஒன்ரு இரண்டா...! பதினன்கு ஆண்டுகள்! ஒரு பத்தும், அடுத்து ஒரு நான்கும் ஆக 14 வருடங்கள்! ஒரே கட்சி—அதுதான் காங்கிரஸ் கட்சி பதினன்கு வருடங்களாக கொடிகட்டி ஆண்டு வருகிறது—இந்தியாவை! அதுவும் எல்லா மாநிலங்களிலும் அவர்களது கட்சியே ஆண்டு வருகிறது! இப்படி இன்றுடன் பதினன்கு வருடங்கள் முடிவாகின்றன!

வெள்ளையர்கள் இந்நாட்டை விட்டுக் கொடுத்துவிட்டுப்போனதிலிருந்து 'புதிய வெள்ளையர்களாக' காங்கிரஸ்கட்சியினரே ஏகபோக மிராசு செலுத்தி வருகிருர்கள்!

நாட்டுப் பொருளாதாரம் உயர என்றும், வேலைவாய்ப்புகள் கிடைக்க என்றும், தனி நபர் வருமானம் உயர என்றும், பசியும், பட்டினியும் பறந்தோட என்றும் இப்பதினன்கு வருடங்களுக்குள் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களை வகுத்து முடித்து, இப்போது மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டமும் இறுதிப்படுத்தப்பட்டு விட்டது.

நாட்டு வளர்ச்சிக்கென்று முதலாவது திட்டத்தில் ரூ. 2,220 கோடியும், இரண்டாவது திட்டத்தில் ரூ. 4,800 கோடியும் செலவழித்துவிட்டு இப்போது மூன்ருவது திட்ட காலத்தில் ரூ. 11,600 கோடி செலவழிப்பது என்றும் திட்டமிட்டிருக்கிருர்கள்!

இத்திட்டங்களை நிறைவேற்ற என்று அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான், ரஷ்யா, கனடா...போன்ற நாடுகளிலிருந்தும், உலக பாங்கியிலிருந்தும் ஆயிரம்கோடி ரூபாய்க்கு மேல் கடன் வேறு வாங்கியிருக்கிருர்கள்—காங்கிரசுக்காரர்கள்!

இவ்வளவும் எதற்கென்ருல் 'நாடுவாழ—நலம்பெற' என்று காங்கிரசுக்காரர்கள் பேசி வருகிருர்கள்! 'எதற்கும் திட்டம் வேண்டும்; திட்டம் போட்டு முன்னேறிஞல்தான் நாடு முன்னேற முடியும், அதுவும் 'மாதிரி சோஷலிசத்தை' அடைய இப்போக்கே நல்லது—சிறந்தது — வாழ்வளிக்கவல்லது' என்று முழங்கி வருகிருர்கள்!

திட்டம் சுபீட்சத்திற்கு வழியாகும். அதனுல் திட்டம் தயாரித்த காங்கிரசையே பதவியிலிருக்கச் செய்ய வேண்டும். அப்படியாஞல்தான் நாடு வளம்காணும் என்று 'ஓட்டுப் பேச்சு' வேறு நடத்துகிருர்கள்!

இப்படிப் பதினன்கு வருடங்களாக வாய்கிழியப்பீத்தியும்—அவர்களே ஆட்சி இடத்தில், பலவித அலட்சணங்களுக்கிடையே, தொடர்ந்து இன்றுவரை அதிகாரம் செலுத்தியும் நாடு கண்ட பலன் என்ன? திட்டங்கள் போட்டும் திண்டாட்டம் நீங்கிவிட்டதா? காங்கிரசு ஆட்சியில் எல்லோர் கவலையும். சூரியனைக் கண்டதும் மறைந்தோடும் பனியைப்போல, ஓடிப்போய்விட்டதா?

வேலையில்லாத் திண்டாட்டம் நீங்கிற்ரு? வாழ்க்கைத்தரம் கூடிவிட்டதா? பொருளாதார நிலை உயர்ந்துவிட்டதா? பொதுவாக அவர்களது 'பாரதம்' என்ன பலன் தான் கண்டிருக்கிறது! 15-ம் ஆண்டு சுதந்தர தினத்தைக் கொண்டாடும் காங்கிரசுக்காரர்கள் இதைக் கொஞ்சம்' சிந்தித்துப் பார்க்க வேண்டும்! கொடி ஏற்றுவோர் சற்றே சிந்தித்துப் பார்க்க வேண்டும்?

பதினன்கு ஆண்டு காங்கிரசார் ஆட்சியில் எவ்வித வளமும் நாடு கண்டிடவில்லை! வாழ்வு மலர்ந்திடவில்லை! வேதனை விலகிடவில்லை! நொந்தவர் வாழ்வு நிமிர்ந்திடவில்லை.

மாருக எங்கு நோக்கினும் பசிப்பிணியும். வறுமையும் மக்களை வாட்டுகிறது. காலைமுதல் மாலைவரை உழைத்தாலும் தகுந்த ஊதியம் கிடைப்பதில்லை. பொருள்களின் விலையோ மலையளவு உயர்ந்துகொண்டே போகிறது. இதை நிறுத்துவதற்கு எத்தனை குழுக்களை நியமித்து விசாரணைகள் நடத்திஞலும் முடிவதில்லை! குறிப்பாக ஏழையர் வாழ்வு ஏற்றம் பெற மார்க்கமில்லை!

நாம் இப்படிக் குற்றம்சாட்டிப் பேசும்போது, ஆமாம் தி. மு. க, வினருக்கு இதுதான் தொழில்' என்று காங்கிரசார் கோபித்துக் கொள்வதுண்டு! ஆனுல் இது உண்மை! வெறும் பேச்சு அல்ல! சமீபத்தில் 'டில்லி சர்க்கார்' ஒரு குழுவை அமைத்து இந்நாட்டு தொழில் விவசாயம்பற்றி பொருளாதார நிலைபற்றிய குறிப்பு ஒன்றைத் தயாரிக்கும்படி செய்தது. (National Sample Survey and Agricultural Labour enquiry) அதன்படி அக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையைப் பார்த்தால் 'நாட்டின் நிலை' நன்கு விளங்கும்!

அக்குழுவின் கருத்துப்படி .-

2,70 கோடிப் பேருக்கு இந்தியாவில் தினம் ஒரு மணி நேர வேலை வாய்ப்புத்தான் இருக்கிறதாம்.

2 கோடிப் பேருக்கு நாள் ஒன்றுக்கு இரண்டு மணி நேர வேலை வாய்ப்புத்தான் இருக்கிறதாம்.

4,50 கோடிப் பேருக்கு நாளொன்றுக்கு நான்கு மணி நேர வேலை வாய்ப்புத்தான் கிடைக்கிறதாம்.

மற்ற நேரங்களில் அவர்களுக்கு ஒரு வேலையும் இல்லையாம்!

இதுதான் காங்கிரசு ஆட்சியில் இந்தியாவின் நிலை!? பரிதாபம்!

இது மாத்திரம் அல்ல. அக்குழு மேலும் விளக்கம் தருகிறது :-

இந்தியாவில் தினம் 5 அணுவைக் கொண்டுதான் 6 கோடிப் பேர்கள் வாழ்க்கை நடத்துகிருர்களாம்!

4 கோடிப் பேர்களது தினசரி வாழ்க்கை 4 அணுவுக்கும் குறைந்த அளவில் ஓடிக்கொண்டிருக்கிறதாம்!

2 கோடிப் பேர்களது வாழ்க்கை 2 அணுவிற்கும் குறைந்த அளவிற்குள் அடங்கி இருக்கிறதாம்.

காங்கிரசு ஆட்சியில் 'இந்தியா' கண்ட பலன் இதுதான்! பரிதாபம்!

விலைவாசி ஏறி இருக்கிறது அந்த அளவிற்கு தினக் கூலியாவது உயர்ந்திருக்கிறதா என்ருல் அதுவும் இல்லை! உயர்விற்குப் பதிலாக முன்னைவிடத் தாழ்ந்திருப்பதுதான் இங்குள்ள வேடிக்கை!

தினக்கூலி ஆண்களுக்கு 109 புதிய காசாக இருந்தது 96 புதிய காசாகக் குறைந்திருக்கிறது.

பெண்களுக்கு நாள் கூலி 68 புதிய காசாக இருந்தது 59 காசாகக் குறைந்திருக்கிறது.

சிறுவர்களுக்கு ஒரு நாள் கூலி 70 புதிய காசாக இருந்தது 53 புதியகாசுகளாகக் குறைந்திருக்கிறது!

என்ன வேடிக்கை! வருந்தத்தக்க இவ்விவரத்தையும் அக்குழுவினரே எடுத்துக்காட்டியுள்ளனர்!

14 ஆண்டுக்கால காங்கிரசு ஆட்சியின் லட்சணம் இப்படி இருக்கிறது! இந்நிலையில் அமெரிக்கா புகழ்கிறது, ரஷ்யா புகழ்கிறது......என்றெல்லாம் பேசிக் கொள்வதினின்றும் நின்றுவிடுவதில்லை! "பார் எங்கள் புகழை" என்று வானளாவப் பேசுகிருர்கள்! 'ஆடுவோமே பள்ளு பாடுவோமே' என்று ஆனந்த கீதம் இசைக்கிருர்கள்!

தாய் பிச்சை எடுக்க தனயன் கோதானம் வழங்கிஞன் என்பது போலிருக்கிறது காங்கிரசுக்காரர்களின் சுதந்திரதினக் கொண்டாட்டம்! விழாக் கொண்டாடியவர்கள் இதைச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டுகிரேும்.

விளையும் பயிர் முளையிலே தெரியும் என்பார்கள்! அதுபோல் அகத்தின் அழகு முகத்தில் தெரியும்! நல்ல 'முருங்கை'க் கொம்பை வெட்டி பூமியில் நட்டுப் பாதுகாத்தால் ஒருவருடம் அல்லது இரண்டு வருடத்திற்குள் அது நமக்குப் பலன்கொடுக்க ஆரம்பித்துவிடும்! கொம்பு நட்டுப்பதினன்கு ஆண்டுகள் ஆகியும் மரம் உண்டாகவில்லை என்ருல் என்ன அர்த்தம்? ஒன்று கொம்பு ஆகாததாக இருந்திருக்க வேண்டும். அல்லது வளரலாயக்கற்றதாக இருந்திருக்க வேண்டும்.

அதேபோல் 14 வருடகால ஆட்சியில் காங்கிரசால் நாட்டுக்கு நன்மையில்லை என்ருல் காங்கிரஸ் ஆட்சி முருங்கைக் கொம்பைபோல் ஆகாத ஆட்சி என்பதைத் தவிர வேறு என்ன? பொதுமக்களே! கவனத்தில் வையுங்கள்! அடுத்த தேர்தல் வருகிறது. காங்கிரசுக்கு நல்ல பாடம் கற்பியுங்கள்.

-ச வெ. பாண்டியன்

(தூத்துக்குடி) பி.ஏ..

---

13-ம் பக்கத் தொடர்ச்சி.........

வார். பின் கடன்கொடுத்த மொத்த வியாபாரிக்கு நல்ல பிள்ளையாக நடந்துகொள்ள வேண்டுமென்ற எண்ணத்தில், கடனுக்கு எடுத்து வந்த சரக்கை அசல் விலைக்கும் குறைத்து (அதாவது நட்டத்திற்கு) கேட்ட விலைக்கு ரொக்கத்திற்கு விற்று, அந்தப் பணத்தை மொத்த வியாபாரிக்குக் கொடுப்பார்; இப்படி வியாபாரம் நடத்தும் வியாபாரிக்கு ஒரு வருடத்தில் கடையை அடைத்துவிடும் நிலை ஏற்படும். இந்த நிலை இந்தியப் பேரரசுக்கு ஏற்படாது என்ருலும் வாங்கிய கடனை வகையாக அடைக்க முடியவில்லை என்ருல், ஒருவித மோசமான நிலை அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது என்று பொருள்!

வெளிநாடுகளில் வாங்கியிருக்கும் கடனை, இந்தியாவில் உற்பத்தியாகும் பொருள்களை ஏற்றுமதி செய்து கடனை அடைத்துவிடுவோம் என்று காங்கிரஸ்காரன் கூறுகிருன்—ஆட்சி நடத்துகின்ற காங்கிரஸ் அமைச்சர்கள் கூறுகிருர்கள். பொது மக்களே! ஏழைப் பாட்டாளிகளே! தொழிலாளர்களே! வரியைக் கொடுத்துக் கொடுத்து வாழ்கையை ஜீவ மரணப் போராட்டமாக்கிக் கொண்ட இந்த நாட்டிற்குரியவர்களே! பார்த்தீர்களா. நேருவின் ஆட்சி ஏற்றுமதி செய்து கடனை அடைக்கும் இலட்சணத்தை! நீங்கள் வாயைக் கட்டி—வயிற்றைக் கட்டி வரியாகக் கொடுக்கிறீர்கள்; அந்த வரிப்பணம் எந்த வகையில் பாழடிக்கப்படுகிறது பார்த்தீர்களா!

இந்திய சர்க்கரைக்கு அமெரிக்காதான் அதிக விலை கொடுக்கிறதாம், அப்படியிருந்தும் 16 கோடி நட்டம் ஏற்படுமாம்! மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால், அந்த நாடுகளின் விலை குறைவாக இருப்பதால் 16 கோடிக்கும் மேல் நட்டம் ஏற்படும் போலும்; உள்நாட்டில் சர்க்கரை கிடைக்காமல் தவிக்கிருர்கள், நியாயமான விலைக்கு மேல் கூடுதலாகவும் கொடுத்து வாங்குகிருர்கள் மக்கள்; இந்த ஆளவந்த திறமைசாலிகள் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்து, உண்டான அசல் விலையையும் கிடையாமல் நட்டத்திற்கு அனுப்புகிருர்கள். இவர்கள் கடனை அடைக்கும் இலட்சணம் இவ்விதமாக இருக்கிறது.

இவர்கள்தான் நாட்டை ஆளும் திறமை பெற்றவர்களாம். பொது மக்களே! நல்லுள்ளம் படைத்த நடுநிலையாளர்களே! இந்த காங்கிரஸ் அவலட்சண ஆட்சிக்கு 1962 தேர்தலில் நீங்கள்தான் தக்க பதில் தரவேண்டும். இந்த நாட்டை கடன்கார நாடாக்கி, கடனை அடைப்பதாகக் கூறி பல கோடியை பாழாக்கும் காங்கிரஸ் ஆட்சியை மாற்ற 1962 தேர்தல் நல்ல சந்தர்ப்பம்; மறந்துவிடாதீர்கள்!

# சுதந்திரமும் "சுபீட்சமும்?"

## தோப்பூர் திருவேங்கடம் பி. ஏ.

இந்தியா சுதந்திரம் அடைந்து 14 ஆண்டுகளாகின்றன. ஆம்! மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றி காட்டினேமே என்று கூறுவார்கள் காங்கிரசார். மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களாலும் தென்னகத்திற்கு, குறிப்பாக தமிழகத்துக்கு ஏற்பட்டிருக்கும் நன்மை என்ன? சிறுசிறு குடிசைத் தொழில்களும், சிலபல இலட்சங்களிலே அணைகளும் கட்டிவிட்டு வேறு முக்கிய தொழிற்சாலைகளை ஆரம்பிக்காமல் காலங்கடத்தி வருகிறார்கள், இந்த மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்திலேயும் நம் தமிழகத்திற்கு இரயில்வே பாதைகள் விஸ்தரிப்பு கிடையாது, சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்படமாட்டாது.

இவைகள்தான் இல்லை என்றாலும் வேலையற்றோருக்கு வேலை கிடைக்கும் வாய்ப்பு உண்டா என்று பார்த்தால் அதுவும் கிடையாது. இன்னும் பல லட்சம் பேர் வேலை இன்றியே இருக்க வேண்டி வருமாம்.

பதினான்கு ஆண்டுகளில் இவர்களால் காஷ்மீரை இந்தியாவோடு இணைக்கத்தான் முடிந்ததா? குருச்சேவின் ஆதரவுதான் கிடைக்கிறது அதுவும் அமெரிக்கா பாகிஸ்தானுக்கு படைகளை கொடுத்து உதவுகிறதே என்ற காரணத்தால்! கோவா, டையூ, டாமன் போன்ற பகுதிகளை போர்ச்சிகீசிடம் இருந்து வாங்க முடிந்ததா? சீனாவுக்கும் இந்தியாவுக்குமிடையே ஏற்பட்ட எல்லைத் தகராறை தீர்க்க முடிந்ததா? 40,000 சதுரமைல் நிலத்தை பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். உள்நாட்டு குழப்பங்களை தீர்க்க முடிந்ததா? பஞ்சாபிசுபா கேட்டு சீக்கியர்கள் போராட்டம் ஒரு பக்கம், நாகநாடு கேட்டு நாகர்கள் ஓர் பக்கம் போர்தொடுத்த வண்ணமுள்ளனர்.

ஒவ்வொரு மாநிலங்களில் எழும் கோஷ்டி மனப்பான்மை இன்னும் தீர்ந்தபாடில்லை! இவைகள் எவற்றையும் பற்றி கவலைப்படாத காங்கிரசார் வருகின்ற தேர்தலைப் பற்றி இப்போதிருந்தே ஆங்காங்கே பணமூட்டைகளை கட்டித் தழுவி 'பண மூட்டைகளை' ஆங்காங்கே திரட்டிப்போட்டு வைக்கின்றனர், நாங்கள்தானே ஓட்டு போடுவதற்கு உரிமையளித்தோம் ஆதலால் எங்களுக்கே ஓட்டுபோட வேண்டுமென்பார்கள்! இதுதானா ஜனநாயகம் என்று மக்கள் கேட்டால், முதன் மந்திரிகள் மாநாட்டைக் கூட்டி, நாடு பிரிய வேண்டுமென்று சொல்லுகின்ற கட்சிகளை சட்டரீதியாக தடை செய்ய திட்டந் தீட்டி வருகிறார்கள். விருதை வீரர்! தீர்க்கதரிசி! முதலமைச்சர் காமராசர் பேசி இருக்கிறார் தடை ஏதும் செய்யத் தேவை இல்லை, தேர்தலுக்கு அப்புறம் அந்த கட்சியே அழிந்துவிடுமென்று! நாம் இங்குதான் சிந்திக்க வேண்டும்.

இங்கிலாந்து நாட்டிலே இரண்டாம் உலகப்போர் மூண்ட நேரத்திலே வின்ஸ்டன் சர்ச்சில் அப்போதைய பிரதமமந்திரி. அவர்தான் அமெரிக்கா சென்று ட்ருமனையும் ரஷ்யா சென்று ஸ்டாலினையும் சந்தித்து மிகத் தந்திரமாக இங்கிலாந்தைக் காப்பாற்றினார். அதே சர்ச்சில் இரண்டாம் முறையாக தேர்தலில் நின்றஞான்று அவருடைய கட்சியினர் பெரும்பான்மையினர் வெற்றிபெறவில்லை. அந்த நாட்டு மக்களுக்கு தெரியாதா அவர் செய்த பெரிய உதவி. இருந்தாலும் அவர்கள் சொன்னார்களாம் "சர்ச்சில் போர் காலத்திற்கு மட்டும்தான் பிரதம மந்திரி" என்று "Winston Churchill is only for war and not for peace" என்பதாக,

இங்கிலாந்தை ஜனநாயகத்தின் தொட்டில் என்பார்கள். அது எவ்வாறெனில் உலகின் பல பாகங்களும் அந்த நாட்டு ஆட்சி முறையான பார்லிமெண்டரி முறையைத்தான்பின்பற்றுகிறார்கள் அங்கு ஒரு முறை ஒரு கட்சி ஆண்டால் அடுத்த முறை வேறு கட்சிக்கு வாய்ப்பளிப்பார்கள். ஆனால் இந்த முறைதான் இரண்டாம் முறையாக 'கன்சர்வேடிவ் கட்சி' ஆட்சிக்கு வந்துவிட்டது. அதற்கு காரணம் தொழிற் கட்சிக்குள் ஏற்பட்ட குழப்ப நிலையே ஆகும். அதைப் போலவே இந்தியாவிலும் இவர்கள் ஏற்படுத்த முயலவேண்டும். அதுதான் உண்மையான ஜனநாயகவாதிகளுக்கடையாளம்.

அதை விடுத்து எதிர்கட்சிகளை அழித்தொழிக்க வேண்டுமென்றால் அது ரஷ்யா நடத்தும் ஆட்சியாகத்தான் இருக்கமுடியும். எவ்வாறெனில் ரஷ்யாவில் கம்யூனிஸ்டு கட்சி தவிர வேறு எந்த கட்சியும் கிடையாது.

அதைப்போலவே நேரு சர்க்காரும் எழுத்துரிமை, பேச்சுரிமை அளித்துவிட்டு அதைத் தடை செய்ய முன்வருவார்களானால் அக்கொடுமையைத் தகர்த்தெறிய வேண்டியது திராவிட மக்களின் உடனடிக் கடமையாகும்.

பண்டித நேரு அவர்கள் சொன்னார்கள் "Political revolution is useless unless it is followed by an economic revolution" என்று பொருளாதார புரட்சி இல்லை என்றால் "அரசியல் புரட்சி மட்டும் ஒருவித பயனுமளிக்காது என்றார்கள்". இன்றைக்கு அதே நிலையில்தான் தென்னாடு உள்ளது என்பது உள்ளங்கை நெல்லிக் கனி போல் விளங்கும்.

இவற்றை எல்லாம் நோக்குங்கால் நாம் ஆட்சியை மாற்றியமைப்பது தவிர வேறு வழியில்லை என்ற முடிவிற்கு வரவேண்டியவர்களாகின்றோம். ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னர் பிளேட்டோ அவர்கள் நாட்டு மக்களை நோக்கி கூறினார்:

Most of the political and social ill from whichyou suffer are under your control given only the will and courage to change them you can live in another and wiser fashion if you can think it out and work it out you are not awaken to your own powers,

பெரும்பாலான சமுதாய அரசியல் குறைபாடுகள் நிகழ்வதற்கு காரணமானவர்கள்யாரென்றால்நீங்களேதான். (மக்களேதான்! ஆட்சியாளர்களல்ல) நீங்கள் கொஞ்சம் சிந்தித்து செயல்படத் தொடங்கினால் நல்ல நிலையிலே நீங்கள் வாழமுடியும். ஆனால் உங்களுக்கு எங்கே அந்த விழிப்புணர்ச்சி இல்லையே. ஆனால் நான் உங்களுக்கு விழிப்புணர்ச்சி இல்லை என்று சொல்லமாட்டேன். இன்னும் விழிப்புணர்ச்சி அற்று இருக்கிறார்களே அவர்களை தட்டி எழுப்ப வேண்டியது உங்கள் கடமை என்று கூறுவேன்.

நாம் நம்முடைய திராவிட நாட்டு கொள்கையினின்றும் என்றும் நழுவமாட்டோம் என்று உள்ளஉறுதி பூண்டவர்கள் ஆகையால் புரு கூக்கூ என்று கூவுகிற வரையில், கிளி அக்கா! அக்கா! என்று அழைக்கிறவரையில் குயில் கூ கூ என்று கூவுகிற வரை குழந்தை அம்மா! அம்மா என்றழைக்கும்வரை நாமும் 'திராவிட நாடு திராவிடருக்கே' என்று கூறுவோம். இயற்கையில் மாற்றம் நிகழ்ந்தாலும் எங்கள் கொள்கையில் மாற்றம் நிகழாது என்று அண்ணா சொன்ன வார்த்தைகளை நாமும் மாற்றுநக்கு எடுத்துக் காட்டி அதை நடைமுறையிலும் கொண்டுவருவோமாக!

---

16-ம் பக்கத் தொடர்ச்சி

வலிமையாக்கி, "ஆப்பிரிக்க அரசியல் வாதிகளிலேயே மிகுந்த அறிவுத் தெளிவுள்ளவர்" என்று புகழப்படும் நிலைக்கு வளர்ந்துள்ளார்.

கென்யாட்டாசிறைக்குள் வாடும் போது, அவரது இலட்சியத்துக்காகவும், கென்யா நாட்டின் விடுதலைக்காகவும் அந்நாட்டு மக்கள் அயராது போராடினர். அடக்குமுறைகளுக்கு அஞ்சாமல் எந்த எதிர்ப்பையும் துச்சமென மதித்து நாட்டு விடுதலையைப்பெற எல்லா விதமான இன்னல்களையும் ஏற்றுக் கொண்டனர்.

கென்யா மக்களின் தளராத உறுதியினையும்--தங்கள் விடுதலைத் தலைவரின் மேல் அவர்கள் கொண்டுள்ள அசைக்க முடியாத நம்பிக்கையினையும் கண்ட பிரிட்டிஷார் அந்த மக்களுக்கு சில பல உரிமைகளை அளிக்க முன்வந்தது. இதற்கான தோதல்களையும் நடத்தியது. தேர்தலில் "காடு" (Kadu) என்னும் கட்சியினர் அரசாங்கம் அமைக்கும் அளவுக்கும், "கானு" (Kanu) கட்சியினர் அதற்கடுத்த கட்சியினராகவும் வென்றனர்.

இரண்டு கட்சியினருமே விடுதலைத் தலைவன் கென்யாட்டாவை உடனடியாகவும், அதே நேரத்தில் நிபந்தனையற்றும் விடுதலை செய்ய வேண்டுமென்றும், கென்யா நாட்டுக்கு உண்மையான சுதந்திரத்தை விரைவாக வழங்கவேண்டுமென்றும் உறுதியாகக் கூறினர். கானு கட்சியின் பொதுச்செயலாளரான டாம்போயா கென்யாட்டாவை உடனடியாக விடுதலை செய்யாத வரையில் அரசாங்கத்தில் எந்தப் பதவியையும் தங்கள் கட்சி ஏற்றுக் கொள்ளாது என்று தெரிவித்தார்.

கென்யாட்டா விடுதலை செய்யப் பட்டுவிட்டார்!

கென்யா நாடும் வெகு அண்மையிலேயே பூரண விடுதலையை அடைய இருக்கிறது.

விடுதலை வீரர்களின் தியாகம் வீண் போகாது என்பதற்கு கென்யாட்டாவின் உரிமைப்பயணம் ஓர் நல்ல எடுத்துக்காட்டு!

இதுபோன்ற விடுதலை வீரர்களின் வெற்றிச் செய்திகளைக் கேள்வியுறும் திராவிட மக்களுக்கு—தென்னகத்தின் விடுதலை இயக்கத்தாருக்கு—ஏகாதிபத்தியத்தினர் சுதந்திரப் பரிசாக வேறு ஒரு செய்தியை அளித்துள்ளனர்!

ஏகாதிபத்தியப் பிடிப்பிலிருந்து தாயகத்தை விடுவிக்க முயல்வது குற்றம் என்று கூறி தாயக விடுதலை கோருவோரை சிறையில் தள்ளிப் பூட்ட சட்டம் தயாரிக்கப்போகிறார்களாம் டெல்லியப்பரின் ஆட்சியினர்!

கும்பமேளரின் கொலுவில் கூடிக் கலந்த ஆதிக்க புரியினரும், அவர்தம் அடிவருடிகளும் இது குறித்து ஆலோசனை நடத்தினராம்!

அவனியெங்கணுமுள்ள விடுதலை இயக்கங்கள் பல, டெல்லி ஏகாதிபத்தியத்தினர் ஏவிடத் துடித்திடும் இதுபோன்ற அடக்குமுறைப் பாணங்களைத் தூள் தூளாக்கி வெற்றி முழக்கங்கள் எழுப்பி வருகின்ற காலம் இது!

அடக்குமுறைகளுக்கு அஞ்சுவது விடுதலை இயக்கங்கள் அல்ல!

அடக்குமுறைகளை ஏவுவது ஏகாதிபத்தியத்தினரின் வாடிக்கை!

அவற்றைத் தாங்கிக்கொள்ளும் உள்ள உரம் பெறுவது விடுதலை இயக்கத்தினரின் கடமை!

அடக்குமுறை பாணங்களைக் கென்யாட்டாவின் மீது ஏவியது ஏகாதிபத்தியம்!

தாங்கிக்கொண்டார்—வென்றார்—இன்று விடுதலை வீரராக பவனி வருகிறார்!

இத்தாலியின் விடுதலைக்குப் போராடிய மாஜினி அந்நாட்டு இளைஞர்களைப் பார்த்து சொன்னான்—இத்தாலியின் விடுதலை வரலாற்றுக்கான தலைப்பை நான் தந்துவிட்டேன், அதன் அத்தியாயங்களை எழுதி முடிக்க வேண்டியது உங்கள் பொறுப்பு—என்று!

இத்தாலி நாட்டு இளைஞர்கள் விடுதலை அத்தியாயத்தை எழுதி முடித்தார்கள்! வீழ்ந்தது அங்கே ஏகாதிபத்தியம்! வென்றது இத்தாலியின் விடுதலைக் குரல்.

சைப்ரஸ் தீவின் விடுதலைக்கான தலைப்பைத் தந்தார் மகாரியாஸ் பாதிரியார்!—அதன் அத்தியாயங்களை எழுதி முடித்தனர் சைப்ரஸ் மக்கள் வீழ்ந்தது ஏகாதிபத்தியம்! வென்றது விடுதலைக் குரல்!

பாக்கிஸ்தான் விடுதலைக்குத் தலைப்பைத் தந்தார் ஜின்னா—வீரமிக்க அத்தியாயங்களை எழுதி முடித்தனர் அந்நாட்டு மக்கள் விடுதலைக்குரல் அங்கும் வென்றது!

ஜோமோ கென்யாட்டா விடுதலைப் போரின் தலைப்பிணைத்தந்தார்—அந்நாட்டு மக்கள் அதன் அத்தியாயங்களைத் தீட்டி வருகின்றனர் அங்கே விடுதலைக்குரல் வெல்லும்!

'திராவிட நாடு திராவிடருக்கே' என்னும் விடுதலைப் போருக்குத் தலைப்பைத் தந்துவிட்டார் அறிஞர் அண்ணா!

அதன் அத்தியாயங்களை எழுத வேண்டியது நாட்டு மக்களின் கடமை!

அடக்குமுறைகளோ—ஆணவ ஆதிக்கங்களோ—வெஞ்சிறையோ—வேட்டுச் சத்தங்களோ எதுவுமே விடுதலை இயக்கங்களை வீழ்த்த முடியாது!

நமது விடுதலைக்குரல் நிச்சயம் வெல்லும்!

# விடுதலைக் குரல் வெல்லும்!

இவ்வாண்டு சுதந்திர தினத்தன்று — சிந்தனையைக் கிளறும் இரண்டு செய்திகள்—நாட்டு மக்களுக்கு பரிசாகக் கிடைத்துள்ளன!

ஒன்பது ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்த சுதந்திர வீரர் ஜோமோ கென்யாட்டா விடுதலையடைந்தார் என்ற செய்தி அவனியெங்குமுள்ள விடுதலை வீரர்களுக்கு களிப்பூட்டும் செய்தியாகும்!

பல ஆண்டுகள் சிறைவாசத்துக்குப் பின் ஏகாதிபத்தியம் இப்போது அவரை விடுவித்துள்ளது.

ஓராண்டல்ல — ஈராண்டல்ல! ஒன்பது ஆண்டுகள்! தன் தாயகத்துக்கு ,விடுதலை கேட்ட வீரருக்கு ஏகாதிபத்தியம் அளித்த பரிசு ஒன்பது ஆண்டுகள் சிறைவாழ்வு!

கருப்பர் மீது வெள்ளையர் செலுத்தும் ஆதிக்கத்தை அழித்தொழிக்க வேண்டும் என்ற விடுதலைக் கிளர்ச்சியின் வீரத்தலைவர் ஜோமோ



கென்யாட்டா! பிரிட்டிஷ் காலனியாகிய கென்யாவில் சுதந்திரப் போராட்டத்தை தலைமை தாங்கி நடத்தியவர் அவர்!

ஆப்ரிக்க மக்களுக்குச் சொந்தமான நாடு வெள்ளை ஏகாதிபத்தியத்துக்கு வேட்டைக் காடாக ஆகிவிட்டதை எதிர்த்து வீர முழக்கம் எழுப்பியவர்!

இவருக்கு ஆப்ரிக்க மக்களிடம் ஏற்பட்டு வரும் அமோகமான செல்வாக்கைக் கண்ட ஏகாதிபத்தியம் இவரை அடக்க ஒடுக்க ஏதேதோ செய்தனர் இயலவில்லை.

இறுதியில் வெள்ளையர் ஆதிக்கத்தை பலாத்கார முறையிலே ஒழித்துக்கட்டவேண்டும் என்ற கொள்கை கொண்ட "மாவ் மாவ்" இயக்கத்தை நடத்திச் செல்கிறார் என்ற பழி சுமத்தி — அவர் மீது பயங்கரமான வழக்குத் தொடுத்தனர்.

ஜோமோ கென்யாட்டா ஜனநாயக முறையில் நம்பிக்கையுள்ளவர் என்றே பெரும்பாலோரால் கருதப்பட்டு வந்தவர், எனினும் இத்தகைய பயங்கரக் குற்றச்சாட்டு அவர்மீது சுமத்தப்பட்டது.

"மாவ் மாவ்" இயக்கம் அடிமைத்தனத்தின் காரணமாக ஏற்பட்ட அவதிகளைத் தாங்கமாட்டாமல் கிளம்பிய பலாத்கார இயக்கம், அதற்கும் தனக்கும் சம்மந்தம் இல்லை என்று ஜோமோ கென்யாட்டா எவ்வளவோ வாதாடியும் பலனில்லாமற் போய்விட்டது. இறுதியில் இவருக்கு நீண்ட காலச் சிறைவாசம் விதிக்கப்பட்டது.

ஆப்ரிக்க மக்களிடம் கென்யாட்டாவுக்கு இருக்கும் ஆதரவையும் செல்வாக்கையும் கண்டு அஞ்சிய ஏகாதிபத்தியம், தீர்ப்பு கூறப்படும் நாளன்று கென்யாட்டாவிடம் அன்பு கொண்ட மக்கள், படையெடுத்து வந்து அவரை மீட்டுப் போய்விடுவர் எனப் பயந்து மிகப் பலமான பாதுகாப்பு ஏற்பாடுகளை வழக்கு மன்றத்தின் உள்ளேயும் செய்து வைத்ததுதாம்!

ஜோமோ கென்யாட்டா சிறையிலே தள்ளப்பட்டார்!

ஆனால் அவர் மூட்டிய விடுதலை உணர்ச்சி ஆப்பிரிக்கர்களின் உள்ளங்களில் கொழுந்து விட்டெரிந்தது.

கென்யாட்டாவின் பாதையைப் பின்பற்றி பிரிட்டிஷ் காலனியாகிய கென்யா விடுதலை முரசு கொட்டியது. உலக நாடுகளின் கவனம் ஆப்பிரிக்கர்களின் இந்த எழுச்சிக்கு அனுதாபமாகத் திரண்டது.

இரண்டு இலட்சத்து இருபத்தையாயிரம் சதுரமைல்கள் பரப்பளவு கொண்ட கென்யா நாடு ஐந்து இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் தொகையுடையதாகும். இத்தகைய நாட்டைத்தான் பிரிட்டிஷார் தங்கள் காலனி நாடாக அதனை நடத்திவந்தார்கள்! ஜோமோ கென்யாட்டாவின் சுதந்தர முழக்கம் — உரிமைக் குரல்— கென்யா மக்களைத் தட்டியெழுப்பிற்று.

கென்யாட்டாவை சிறையிலே பிடித்து அடைத்துவிட்டால் விடுதலைக் கிளர்ச்சியை சுலபத்தில் அடக்கிவிடலாம் என்று மனப்பால் குடித்த ஏகாதிபத்தியம் அவரைக் காவலில் அடைத்தது.

கென்யாட்டா சிறையில் அடைக்கப்பட்டாலும் அவர் உண்டாக்கிய விடுதலை உணர்ச்சி மங்கவில்லை— மறையவில்லை.

கென்யாட்டா தூவிவிட்டுச் சென்ற விடுதலை வித்து—அவர் சிறையிலிருக்கும்போது வளர்ந்து —வலிவும் பொலிவும்பெற்று-மணம் பரப்பும் மலர்ச் சோலையாக இன்று திகழ்கிறது.

அடிமைப்பட்டிருந்த கென்யா நாட்டின் விடுதலை வீரராகச் சிறைக்குள் புகுந்த கென்யாட்டா விறுகொண்டெழுந்த கென்யாவின் வணக்கத்துக்குரிய தலைவராக இன்று வெளிவந்துள்ளார்.

கென்யா அரசியல்வாதிகள் எண்ணற்றோர் மத, இன, நிறவேறுபாடுகளை மறந்து வாழ்த்துக்களைப் பொழிந்தனர்.

எழுபத்தோராவது வயதைத் தாண்டிவிட்ட கென்யாட்டா ஆப்பிரிக்கர்களின் முன்னேற்றத்துக்குப் பாடுபடும் ஆர்வமுடையவராகக் காணப்படுகிறார். கென்யாட்டாவின் விடுதலையை, ஆப்பிரிக்காவின் வரலாற்றிலேயே மிகப் பெருநாள் என்று கூறிக் கொண்டாடுகின்றனர் அந்நாட்டு மக்கள்.

ஜோமோ கென்யாட்டாவின் வீரத்தியாகம் வீண்போகாது என்ற நம்பிக்கையுடன், அடக்குமுறைகளுக்கும், ஏகாதிபத்தியத்தின் எதிர்ப்புக்களுக்கும் அஞ்சாது பணியாற்றிய கென்யா நாட்டினர் இன்று தலைநிமிர்ந்து மற்ற நாடுகளைப் பார்க்கின்றனர்!

விடுதலைத்தீயில் குதித்து வெற்றி வீரராகத் திகழும் கென்யாட்டாவின் விடுதலைச் செய்தி நமக்கெல்லாம் மட்டற்ற மகிழ்ச்சியை ஏற்படுத்துவதில் வியப்பில்லை.

கென்யாவின் விடுதலைக்குப் பாடுபட்டு வரும் கென்யா நாட்டு மக்கள், கட்சி பேதம் மறந்து பொறாமை பொச்சரிப்பின்றி அந்த விடுதலை வீரனை (Father of African Nationalism) "ஆப்பிரிக்க தேசியத் தந்தை" என்று போற்றி அழைக்கின்றனர்.

பல வழிகளிலும் சிதறிக்கிடக்கின்ற ஆப்ரிக்க மக்களை ஒன்றுபடுத்தும் மாபெரும்முயற்சியை கென்யாட்டா மேற்கொள்ள இருப்பதாக அறிவித்துள்ளார்.

கென்யா நாட்டை விடுவிக்க வேண்டும் என்ற நாட்டுப்பற்றும்

**என். வி. என். சோமு**

தேசிய எழுச்சியும் கொண்ட கென்யாட்டா, தனது இருபதாம் வயதிலேயே அரசியலில் பங்கு பெற்று நாட்டு விடுதலைக்குப்பாடுபட ஆரம்பித்தார். கென்யாட்டா என்ற அவருடைய பெயரே, தன் தாயகமான கென்யாவின் மீது அவருக்குள்ள அளவிட முடியாத பற்றின் காரணமாக அமைந்ததாகும்.

இருபது வயதில் ஆரம்பமான அவரது அரசியல் தொண்டு, சிறிது சிறிதாக வளர்ந்து இன்றைய தினம் கென்யா நாட்டின் விடுதலையைக் கைக் கெட்டும் தூரத்தில் வைத்துக் கொண்டுள்ள அளவுக்கு தன் விடுதலைக் குரலை

(15-ம் பக்கம் பார்க்க)

வாசகர்களுக்கு ஓர் மகிழ்வூட்டும் செய்தி!

உங்கள் ஆதரவுக்குரிய

## திராவிடன்

**அடுத்த வாரத்திலிருந்து (26.8.61)**

**10 பக்கங்களாக வெளிவரும்.**

—(0)—

ஒவ்வொரு வாரமும், அறிஞர் அண்ணா, கழக முன்னணியினர் ஆகியோரின் சொற்பொழிவுகளும், சிறந்த கட்டுரைகள் கழகச்செய்திகள், கேள்வி — பதில், கலையரங்கம், கேலிச்சித்திரம் ஆகியவைகளும் இடம் பெறும்.

**விலை 16 காசு.**

**ஆண்டுசந்தா ரூ. 8. ஆறு மாதம் ரூ. 4.**

—(—)—

திராவிடன் மேற்கொண்டுள்ள இச்சீரிய முயற்சி தொடர்ந்து இனிதே நிறைவேற **ஏஜெண்டுத் தோழர்கள்** தட்டுத் தடங்கலின்றி ஒத்துழைக்க வேண்டுகிறேன்.

**சந்தாதாரர்கள்** தங்களின் சந்தாத் தொகையை உடன் அனுப்பி உதவக் கேட்டுக்கொள்கிறேன்,

கழக ஆதரவாளர்கள் புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து பேருதவி புரிய வேண்டுகிறேன். "பேப்பர் கோட்டா" கிடைத்ததும் 12 பக்கங்களாக வெளிவரும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வணக்கம்,

**என். வி. நடராசன்**

ஆசிரியர், வெளியிடுபவர்: என். வி. நடராசன், அச்சிடுபவர், சோமு அச்சகம், 163, வால்டாக்ஸ் ரோடு, சென்னை-1